## தோழர் ஆ. தங்கராஜா

# வாழ்வும் நினைவும்



- தோழர் ஆ. [illegible] நினைவுக் குழு -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் தங்கராஜா நினைவாக

## முதலாம் ஆண்டு ஞாபகார்த்த வெளியீடு

தோழர் ஆ. தங்கராஜா நினைவுக் குழு

08.09.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THOZAR THANGARAJA : VAZVUM NINAIVVUM

| | |
|---|---|
| Edition : | 08.09.2019 |
| Publishers : | Comrade A.Thangaraja<br>Memorial Committee<br>Kanpollai, Nelliadi |
| Cover Design : | S. T. Anujan |
| Lay out : | Siva Parathan, Pandetheruppu |
| Print : | J.S. PRINTERS,<br>SIllalai Road,<br>Pandetheruppu. |
| ISBN: | |

தோழர் தங்கராஜா: வாழ்வும் நினைவும்

| | |
|---|---|
| பதிப்பு : | 08.09.2019 |
| வெளியீடு: | தோழர் ஆ. தங்கராஜா<br>நினைவுக் குழு,<br>கன்பொல்லை<br>நெல்லியடி |
| அட்டை வடிவமைப்பு: | எஸ். ரி. அனுஜன் |
| பக்க வடிவமைப்பு: | சிவ பரதன், பண்டத்தரிப்பு |
| அச்சு: | ஜே.எஸ். பிறின்ரேஸ்<br>சில்லாலை வீதி<br>பண்டத்தரிப்பு |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- தோழர் தங்கராஜாவின் வாழ்க்கைக் குறிப்புகள் 05
- தோழர் தங்கராஜா: வாழ்வும் நினைப்பும் 09
  சி. கா. செந்திவேல்
  பொதுச் செயலாளர், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி
- சமூக மாற்றத்திற்கான இசைக் கலைஞர் தோழர் தங்கராஜா 25
  க. தணிகாசலம், பிரதம ஆசிரியர், தாயகம் இதழ்
- நினைவழியாத் தோழர் தங்கராஜா 28
  செல்வம் கா. கதிர்காமநாதன்
  வலிகிழக்கு பிரதேச சபை உறுப்பினர்
  வடபிராந்திய செயலாளர், பு.ஜ.மா.லெ. கட்சி
- கன்பொல்லை மண்ணிலிருந்து விடுதலை விருட்சங்கள் தோன்றும் 32
  டேவிட் சுரேன்
  உக்குவளை பிரதேச சபை உறுப்பினர்
  மலையகப் பிராந்தியச் செயலாளர், பு.ஜ.மா.லெ கட்சி
- ஓய்வில்லாப் போராளி 34
  சு. டொன் பொஸ்கோ, தேசிய கலை இலக்கியப் பேரவை, வவுனியா
- ஒரு சமூகத் தொண்டனை இழந்துவிட்டோம் 37
  பொன். தம்பிமுத்து, கரவெட்டி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்
- கட்சியையும் தோழர்களையும் மக்களையும் நேசித்து வாழ்ந்தவர் 39
  என். பிரதீபன்
  வன்னி மாவட்டச் செயலாளர், பு.ஜ.மா.லெ. கட்சி
- கிராமத்தின் முன்னேற்றத்தில் முன்னின்று உழைத்தவர் 43
  க. இராஜ,ரட்ணம்
  ஸ்தாபகர், ஓய்வுநிலை அதிபர், சிறி நாரதா பாடசாலை, கன்பொல்லை
- தோழர் தங்கராசா எங்கள் ராசா 45
  சட்டத்தரணி சோ. தேவராஜா
  தலைவர், புதிய ஜனநாயக பொதுத் தொழிலாளர் சங்கம்
- எங்கள் தோழர் தங்கராசா அண்ணை 52
  தவராசா சத்தியதாஸ், டென்மார்க்
- பேந்துமேன் சுணக்கம்—கவிதை 54
  செண்பகன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1966 ஒக்ரோபர் 21 எழுச்சி முதல்
1971 வரையான காலப்பகுதியில்
ஆலயங்கள், தேனீர்க் கடைகள் திறக்கட்டும்
சாதி ஏற்றத்தாழ்வு ஒழிந்து சமத்துவம்
நிலைக்கட்டும்
எனப் போராடி உயிர் நீத்த
அனைத்துத் தியாகிகளுக்கும்
போராட்டங்களில் பங்குகொண்டு
காலத்தால் மறைந்த போராளிகள்
அனைவருக்கும் இந்நினைவு நூல்

**சமர்ப்பணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் தங்கராஜாவின் வாழ்க்கைக் குறிப்புகள்

கரவெட்டி மேற்கு கன்பொல்லைக் கிராமத்தின் தோழர் தங்கராஜா புகழ்பூத்த கலைஞனாகவும் அதேவேளை கம்யூனிஸ்டாகவும் வாழ்ந்து மறைந்தவர். 1942ம் ஆண்டு சித்திரை 29ம்திகதி ஆழ்வார் நாகி தம்பதிகளுக்கு ஒரே ஆண் குழந்தையாகவும் மூன்று சகோதரிகளுக்கு சகோதரனாகவும் பிறந்தவர் தங்கராஜா. தனது மூன்றாம் வகுப்பு வரையான கல்வியைத் தேவரையாளி இந்துக் கல்லூரியிலும் பின் எட்டாம் வகுப்புவரை கரவெட்டி ரோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் கற்றவர். உழைக்கும் பின்தங்கிய குடும்ப பின்னணிகொண்ட மாணவர்கள் வழமையாக எதிர்நோக்கும் வாழ்க்கை நெருக்கடிகள் வறுமை காரணமாக எட்டாம் வகுப்புடன் கல்வியை நிறுத்திக் கொள்ள வேண்டி ஏற்பட்டது. இருப்பினும் அவர் தனது பதின்ம வயதில் குரல் வளத்துடன் நடிப்புக் கலையிலும் முன்நின்றார். தனது தந்தையைப் போன்று ஆர்மோனியம் வாசிப்பதிலும் நாடகம் நடிப்பதிலும் ஆர்வமானார். அதன் வளர்ச்சியே அவரை ஒரு சிறந்த ஆர்மோனியக் கலைஞராக்கியது.

தோழர் தங்கராஜா தனது மாணவப்பருவத்திலேயே பதின் நான்காவது வயதில் அன்றைய சூழலில் தமிழ் நாட்டிலிருந்து வரும் திராவிடக் கழக நூல்கள் பத்திரிகைகளைப் படித்து ஈ. வே. ரா (பெரியார்), சி. என். அண்ணாத்துரை போன்றோரின் சீர்திருத்தக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார். அதனால் அவரிடம் சமூக நீதிக் கருத்துக்கள் குடிகொண்டன. அதன் மூலம் தனது கிராம உழைக்கும் ஒடுக்கப்படும் மக்கள் பற்றிய சமூக அக்கறை உருவாகியது. கரவெட்டி மேற்கு கனுவில் சனசமூக நிலையத்தில் இணைந்ததுடன் அதன் உதவிச் செயலாளராகவும் தெரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டார். இவ்வேளையில் 1956ம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராகப் பொன். கந்தையா அன்றைய பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்டார். அவ்வேளையிலான கம்யூனிஸ்ட் கட்சிப் பிரசாரத்தால் கவரப்பட்ட தங்கராஜா கம்யூனிஸ்ட் கொள்கைகளைப் படிக்கவும் செயற்படவும் முன்வந்தார். அன்றைய கம்யூனிஸ்ட் பிரமுகர்கள், தலைவர்கள் உரையாற்றும் கூட்டங்களில் பங்குபற்றிவந்ததுடன் அக் கொள்கைகளே எமது அடக்கப்படும் மக்களுக்கும் கிராமத்திற்கும் விழிப்புணர்வையும் சாதி சமூகப் பிரச்சனைக்கான தீர்வுகளையும் கொண்டுவரும் என்பதில் உறுதியாக இருந்தார். 1960ம் ஆண்டில் ஆலயப் பிரவேசம், தேனீர்க்கடைச் சமத்துவம் பற்றி சிறுபான்மைத் தமிழர் மகாசபை மற்றும் சமூக அமைப்புகள் முன்னெடுத்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. அக் காலத்திலேயே கே. டானியல், அன்ரனி, சுந்தரம், ஆர். ஆர். தருமரத்தினம், குமாரசுவாமி ஆகியோரைக் காண முடிந்தது. அவர்கள் முன்னெடுத்த சமாதானமாகக் கடைகளைத் திறப்பது, ஆலய நிர்வாகிகளோடு பேசிப் பிரவேசம் செய்வது என்பன எதுவுமே சாத்தியப்படவில்லை. பொன். கந்தையா பாராளுமன்ற உறுப்பினராக இருந்தும் அவற்றைச் செய்யமுடியவில்லை.

இதே காலப்பகுதியிலேயே கன்பொல்லை கனுவில் சனசமூக நிலையத்தில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற் றப்பட்டன. ஒன்று ப. நோ. கூ. சங்கம் அமைப்பது. இரண்டாவது பாடசாலை ஒன்றினைக் கிராமத்தில் நிறுவுவது. பாடசாலைக்குத் தேவையான காணியினை தன்னுடைய குடுப்பத்திற்குரியதை வழங்குவதற்குத் தங்கராஜா தீர்மானித்து வழங்கினார். அக் காணியிலேயே பாடசாலை தொடங்கப்பட்டது. இப் பாடசாலையை உருவாக்குவதில் தங்கமணி, தவம், இராஜரட்ணம், குலசிங்கம், லிங்கம், பரம்சோதி, மகாலிங்கம், சிவபாதம், இரத்தினம் ஆகியோருடன் இணைந்து தங்கராஜா செயற்பட்டார். அதுவே இன்றைய சிறிநாரதா பாடசாலையாக நிமிர்ந்து நிற்கிறது.

தோழர் தங்கராஜா கம்யூனிஸ்ட் கொள்கைகளை உள் வாங்கி வந்ததுடன், 1964ல் உருவாகிய தோழர் நா. சண்முகதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையிலான புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்துவம் பெற்ற ஏனைய கன்பொல்லைத் தோழர்களோடும் நெல்லியடி பொலிகண்டி, பருத்தித்துறை, கரவெட்டி கிழக்கு கட்சித் தோழர் களுடன் இணைந்து செயற்பட்டும் வந்தார். கே. எஸ். இரத்தினத் துடன் இணைந்து புரட்சிகரமான நாடகங்கள் கலை நிகழ்வுகளை நடாத்தியும் வந்தார்.

பெற்றோரையும் சகோதரிகளையும் போற்றி மதித்து தன் உழைப்பைக் குடும்பத்தில் பகிர்ந்து வந்த தங்கராஜா அதே கிராமத்தின் வள்ளிப்பிள்ளை (தங்கம்) என்பவரை மணம் முடித்து குடும்பமானார். அவர்களுக்கு நான்கு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண்பிள்ளையுமாக தங்கேஸ்வரராஜா(வாசன்), இலங்கேஸ்வன் (தாசன்), தவசிறீபன் (சிறீபன்), தவசீலன் (சீலன்), கவிதா ஆகிய ஐந்து பிள்ளைகளைப் பெற்று வளர்த்து அவர்களை வாழ வழிகாட்டினார், அன்பும் பாசமும் ஒருவரை ஒருவர் மதிக்கும் பண்புள்ள ஒரு உழைக்கும் வர்க்கக் குடும்பத்திற்கு தனது பொது வுடைமைக் கொள்கையாலும் நேர்மையான வாழ்வு முறை களாலும் வழிகாட்டி நின்றவர் தங்கராஜா. தோழர் தங்க ராஜா தனது குடும்பத்தை கட்சியோடும் அதன் கொள்கை களோடும் நெருக்கமாக வைத்திருந்து வந்தார்.

1966 ஒக்ரோபர் 21 எழுச்சியின் புரட்சிகரப் போராட்ட முழக்கங்கள் சாதியத் தீண்டாமைக் கொடுமைகளால் ஒடுக்கப் பட்டு வந்த ஒவ்வொரு கிராமத்திலும் எதிரொலித்து நின்றன. அதில் ஒன்றாகவே கன்பொல்லைக் கிராமமும் திகழ்ந்தது. அங்குள்ள கம்யூனிஸ்ட் தோழர்களில் தங்கராஜா முக்கிய மானவராகத் திகழ்ந்தார். அங்கு கே. எஸ். இரத்தினம், புலேந் திரன், அமுதா, சிவபாதம், பரமு, செல்லக்கிளி மற்றும் தோழர்கள் தங்கராஜாவோடு இணைந்து அமைப்பு ரீதியாகச் செயற்பட்டனர்.

1970ம் ஆண்டின் நெல்லியடி தேனீர்கடைப் பிரவேசப் போராட்டம் வடபகுதியையும் வடமாராட்சியையும் உலுக்கி நின்ற போராட்டங்களில் ஒன்றாகும். சமாதானப் பாதையில் சாகாது சாதிப்பேய், அடிக்கு அடிகொடுத்துப் போராடியே அதனை விரட்ட முடியும் என்பதை நிலை நாட்டியதே நெல்லியடி தேனீர்க்கடைப் போராட்டம். ஒரே நாளில் ஒரே நேரத்தில் மூன்று போராளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் உயிர்களைப் பறித்து அவர்களைத் தியாகிகளாக்கியதும் கன்பொல்லைப் போராட்டமாகும். அவ்வேளை அப்போராட்டத்தின் போராளிகளாகச் சிவகுரு, நல்லாம்பி, லி. இளையதம்பி, கிளியன், கொழும்பான் மற்றும் பலர் போராட்டம் வெற்றிபெறப் பலம் சேர்த்து நின்றனர். பல வழக்குகளுக்கும் அவற்றின் காரணமாக விளக்க மறியலுக்கும் பலர் உட்பட்டனர். கன் பொல்லை மக்களினது உறுதியான போராட்டமும் அதற்கு வெளியே முற்போக்கு ஜனநாயக சக்திகளும் கம்யூனிஸ்டுகளும் வழங்கிய ஆதரவுமே சமத்துவத்தை வென்றெடுக்கக் காரண மாகியது.

மேற்படி போராட்ட காலங்களில் தங்கராஜா அன்றைய இளம் கம்யூனிஸ்ட் முன்னிலைத் தோழர்களான சி. கா. செந்தி வேல், கு. சிவராஜா, கே. சிவஞானம், கே. குணேந்திரராஜா, எம். ஏ. சி. இக்பால் போன்றவர்களுடன் நெருக்கமாக இருந்து செயற்பட்டு வந்தவர்.

அத்தகைய தோழர் தங்கராஜா 1978ம் ஆண்டின் நடுப்பகுதி யில் இருந்து தோழர்கள் கே. ஏ. சுப்பிரமணியம், சி. கா. செந்தி வேல் தலைமையிலான இன்றைய புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் முன்னணித் தோழர்களில் ஒருவராகவும் அதன் வடபிராந்தியக் குழு உறுப்பினராகவும் செயல்பட்டுவந்தார். தோழர் தங்கராஜா என்றென்றும் நினைவுகளில் இருந்து நீங்காத தோழராகவும் நல்ல கலைஞராகவும் திகழ்ந்தார். அவரது வாழ்வும் நினைவுகளும் புதிய தலைமுறையினருக்கு பயன் தருவதாக அமையவேண்டும்.

நன்றி

**நினைவுக்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் தங்கராஜா: வாழ்வும் நினைவும்

○ சி. கா. செந்திவேல்

பொதுச் செயலாளர், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி

எங்கள் அன்பிற்கும் தோழமைக்கும் உரிய தோழர் ஆ. தங்கராஜா கடந்த வருடம் 28.08.2018 அன்று தனது எழுபத்தி ஆறாவது வயதில் நோயுற்று இயற்கை எய்தினார். அவர் சமூக மாற்றத்தை இலட்சியமாகக் கொண்டு, கம்யூனிஸ்ட் கொள்கையைக் கையேற்று, கட்சிக்கும் மக்களுக்கும் நேர்மையாக இருந்து, மாக்சிச லெனினிச வாதியாக வாழ்ந்து வந்தவர். அவர் சாதிய ஒடுக்குமுறையின் ஏற்றத்தாழ்வுகளுக்கும் தீண்டாமைக்கும் எதிராகப் போராடி வந்த வெகுஜனப் போராட்டங்களில் தனது இளமைக்காலம் முதல் பங்குகொண்டு வந்தவர். அது மட்டுமன்றி இன ஒடுக்குமுறைக்கு எதிரான கட்சியின் நிலை நின்று வெகுஜனப் போராட்டங்களில் பங்குகொண்டு வந்தவர்.

தோழர் தங்கராஜா வடமாராட்சியின் கரவெட்டி கன் பொல்லைக் கிராமத்தைச் சேர்ந்தவர். அன்றைய அடக்குமுறைச் சூழலில் ஆரம்பக் கல்வியை மட்டுமே அவரால் பெறமுடிந்தது. முற்றிலும் உடல் உழைப்பில் ஈடுபடும் உழைக்கும் மக்களைக் கொண்ட அக்கிராமம் வடபுலத்து சாதிய சமூகக் கட்டமைப் பினால் இறுக்கப்பட்டிருந்தது. தமிழர்கள் மத்தியில் நீண்ட நெடுங்காலமாகப் பின்பற்றப்பட்டு வந்த சாதியப் படிநிலையில் அடிநிலையில் வைக்கப்பட்ட மக்களே அக் கிராமத்தில் வாழ்ந்து வந்தனர். வர்க்கமும் சாதியும் என்ற இரண்டு பெரும் பாறாங் கற்களால் ஆண்டாண்டு காலமாக அமுக்கி நசுக்கப்பட்டு வந்த வடபுலத்துப் பின்தங்கிய கிராமங்களில் கன்பொல்லையும் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமம் பொருளாதாரம் அரசியல், சமூக, கல்வி, பண்பாட்டுத் தளங்களில் மேட்டுக்குடி உயர் சாதிய ஆதிக்கத்தால் புறமொதுக்கி வைக்கப்பட்டிருந்தது. சகல நிலைகளிலும் சமத் துவம் மட்டுமன்றி அடிப்படை மனித உரிமைகளும் மறுக்கப்பட்டு இரண்டாம் தரப் பிரசைகளாக அக்கிராம மக்கள் நடாத்தப்பட்டு வந்தனர். சாதிய ஒடுக்கு முறை தலைவிரித்தாடி நின்ற அன்றைய காலகட்டத்தில் பொது இடங்களில் குறிப்பாகத் தேனீர்க் கடைகள், உணவகங்கள், போக்குவரத்துப் பேருந்துகள், பாடசாலைகள், கோவில்கள், அன்னதான மடங்கள் மற்றும் பொது நிகழ்வுகள், தனி நிகழ்வுகளில் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் சாதித் தீண்டா மையின் பெயரால் ஒதுக்கியும் ஒடுக்கியும் வைக்கப்பட்டனர். இக்கொடிய சாதியத்தையும் தீண்டாமையையும் விளக்க சில உதாரணங்கள் போதுமானவையாகும். வட புலத்தில் கிணறுகள் மூலமே வீடுகளுக்கான நீரைப் பெறுகின்றனர். இக்கிணறுகளைக் கல் உடைத்து, வெட்டிக் கிணறாக்குவோர் உடலுழைப்பினரான தாழ்த்தப்பட்ட மக்கள். அவ்வாறு வெட்டப்பட்ட கிணறு உரியவர் களிடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு எந்த ஒரு தாழ்த்தப்பட்டவரும் அக்கிணற்றில் வாளி கொண்டு தண்ணீர் அள்ள முடியாது. உயர் சாதியினர் எனப்பட்டவர்கள் மட்டுமே கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளமுடியும். இக்கொடுமையிலும் மேலானது யாதெனில் மனிதர்கள் இறந்த பின்பு எரிக்கின்ற சுடலைகளிலும் சமத்துவம் இன்றித் தாழ்த்தப்பட்ட சாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே பிணங்களை எரியூட்டமுடியும் என்றவாறே இருந்து வந்தது. சாதியத் தீண்டாமைப் பாகுபாடுகளில் அநேகமானவை உறுதிமிக்க மக்கள் போராட்டங்களால் முறியடிக்கப்பட்டபோதும் மேற்கூறப்பட்டவை போன்றவை பல கிராமங்களில் இன்றும் தொடரப்படுவதைக் காணமுடியும்.

சாதியத்தையும் தீண்டாமையையும் எதிர்த்த கருத்துக்களும் போராட்ட முனைப்புகளும் கடந்த நூற்றாண்டின் ஆரம்பம் முதலிருந்தே கருக்கொள்ள ஆரம்பித்துவிட்டன. பத்து, இருபது, முப்பது, நாற்பதுகளில் பல நிலைகளில் வலியுறுத்தப்பட்டு வந்தன. அவை அமைப்பு வாயிலாகவும் இடதுசாரிக் கட்சிகள் மூலமாக வும் குறிப்பாக அன்றைய கம்யூனிஸ்ட் கட்சி மூலமாகவும் உரத்து ஒலிக்கப்பட்டன. அக்கட்சியின் பின்புலத்து வழிகாட்டலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்ட சிறுபான்மைத் தமிழர் மகாசபை நடைமுறை செயற்பாட்டில் முன்னின்றது. யாழ்ப்பாண நகரத்தின் தேனீர்க் கடைகளிலும் நல்லூர் கந்தசாமி கோவில் வண்ணார் பண்ணைச் சிவன் கோவில், பெருமாள் கோவில் என்பவற்றில் சமத்துவக் கோரிக்கை பலபக்க அழுத்தங்களினாலும் வெற்றி பெற்றது. ஆனால் வடபுலத்துப் பெரும்பாலான சிறுநகர, உள்ளூர் தேனீர்க் கடைகள் உணவகங்களிலும் கோவில்களிலும் சமத்துவம் காணப் படவில்லை. இதே நிலையே பாடசாலைகளிலும் ஆங்காங்கே காணப்பட்டன. இவற்றுக்கு அப்பாலும் சாதிய வக்கிர நடை முறைகள் தாராளமாக இருந்துவந்தன.

அதனால் இவற்றை எதிர்த்த கருத்துக்களும் செயற் பாடுகளும் ஐம்பதுகளிலும் அறுபதுகளின் ஆரம்பத்திலும் அன் றைய பாராளுமன்றக் கம்யூனிஸ்ட் கட்சியால் முன்வைக்கப்பட்டு வந்தன. ஆனால் அவை ஒரு போராட்ட வடிவத்தைப் பெறாது மனுக்கள், விண்ணப்பங்கள், பேசித் தீர்த்தல், சமாதான வழி முறை என்பதிலேயே தங்கியிருந்தன. இதில் 1956ல் பருத்தித் துறைப் பாராளுமன்றத் தொகுதியின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான பொன். கந்தையா தாழ்த்தப்பட்ட மக்கள் பக்கத்தில் உறுதியாக இருந்து வந்தார். அவர் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளி யிலும் அனைத்து உழைக்கும் வர்க்கத்தினருக்காகவும், சாதியத் தீண்டாமையால் ஒடுக்கப்பட தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் குரல் கொடுத்து வந்தார். அவர் கல்வித் துறையில் தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் முன்னேற்றம் காண்பதை வலியுறுத்தியதுடன் அன்று வடபகுதியில் "மகாசபைப் பாடசாலைகள்" என இருந்துவந்த பதினைந்து பாடசாலைகளை அரசாங்கப் பாடசாலைகளாக்கு வதற்கு முழுமுயற்சி செய்து நடைமுறையாக்கினார். அத்தகைய கம்யூனிஸ்ட் கந்தையா காலத்தில் கூடத் தேனீர்க்கடைகள், கோவில்கள் திறந்துவிடப்படவில்லை. அந்தளவிற்குச் சாதியத் தடிப்பு இறுக்கமடைந்தே இருந்து வந்தது. இது பாராளுமன்றப் பதவிகளால் சாதியத் தீண்டாமையை அகற்ற முடியாது என்பதற்கு ஒரு நடைமுறை உதாரணமாகும்.

மேலும் 1957ல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்க காலத்தில் தமிழரசுக் கட்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் என். இராஜவரோதயம் சாதிப்பாகுபாட்டிற்கு எதிரான ஒரு தனி நபர் பிரேரணையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதற்குப் பெயர் "சமூகக் குறை பாடுகள் ஒழிப்புச் சட்டம்" என்பதாகும். மேற்படி சட்டப் பிரே ரணை யினைத் தமிழரசுக் கட்சியின் வடபுலத்துப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் முன்வைக்காது, ஏன் திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் மூலமாகக் கொண்டு வந்தனரென்பது விளங்கிக்கொள்ள வேண்டியதாகும். அதாவது வடபுலத்துத் தமிழ ரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அப் பிரேரணையைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தால் அதன் மூலம் சாதி ஆதிக்க மேட்டுக்குடியினரின் எதிர்ப்புக்கு ஆளாக நேரிடும் என்பதாலும் அதன் மூலம் உயர் சாதிய வாக்குகள் பாதிக்கப்படும் என்பதே அடிப்படையாகும். இருப்பினும் சாதியப் பாகுபாட்டின் வரலாற்றில் அதற்கு எதிரான ஒரு சட்டம் இயற்றப்பட்டமை முக்கியத்துவ முடையதாகும். அன்று அத்தகைய சட்டத்திற்குப் பாராளுமன் றத்தில் இடதுசாரிகளும் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் களும் ஆதரவு வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் மேற்படி சட்டத்தால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வித சமத்துவ உரிமைகளும் கிடைத்துவிடவில்லை. தேனீர்க்கடைகளிலும் உண வகங்களிலும் பாகுபாடும் சமத்துவமின்மையும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. கோவில்களிலும் உட்சென்று வழி படுவது தடுக்கப்பட்டே வந்தது.

இவ்வாறான நிலையிலேயே 1960ன் நடுப்பகுதியில் பாராளு மன்றப் பாதையினை நிராகரித்துப் புரட்சிகரப் போராட்டங்கள் மூலம் மறுக்கப்படும் உரிமைகளை வென்றெடுப்பது என்னும் கொள்கையும் புரட்சிகர முழக்கங்களும் முன்சென்றன. அதனைத் தோழர் நா. சண்முகதாசன் தலைமையிலான புரட்சிகரக் கம்யூ னிஸ்ட் கட்சி கொள்கையாகவும் நடைமுறையாகவும் முன்னெ டுத்தது. இலங்கையின் தென்பகுதியில், தொழிலாளர் போராட்டங் களும் மலையகத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளுக்காக வீதியில் இறங்கிப் போராடிய போராட் டங்களும் முன்சென்றன. அதே கால கட்டத்திலேயே வடபுலத்தில் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகவும் சமத்துவத்திற்காகவும் தாழ்த்தப்பட்ட மக்கள் போராட்டத்திற்கு அணி திரண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கான போராட்ட அறைகூவலை விடுத்த வரலாற்று நிகழ்வே 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியாகும். 'சாதி அமைப்புத் தகரட்டும். சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்பதே அவ் எழுச்சியின் புரட்சிகரத் தொனிப்பொருளாகும். சுன்னாகத்திலிருந்து ஆரம் பித்து யாழ்நகர் வரை இடம்பெற்ற அவ் எழுச்சிப் பேரணியில் வடபுலத்தின் பல்வேறு கிராமங்களில் இருந்தும் மக்கள், குறிப்பாக இளைஞர்கள் சாதிய தீண்டாமைக்கும் அவற்றின் ஒடுக்குமுறை களுக்கும் எதிராகப் புரட்சிகர உணர்வெழுச்சியுடன் அணி திரண் டனர். சுன்னாகம் சந்தை வளாகத்திலிருந்து ஆரம்பித்த பேரணி யில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் சாதியம், தீண்டாமை ஒடுக்கு முறைகளுக்கு எதிரான புரட்சிகர முழக்கங்களை உணர்வுடனும் உத்வேகத்துடனும் எழுப்பி முன் சென்றனர். அப் பேர ணியினைச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் குவிக்கப்பட்டிருந்த குண்டாந்தடிகள் துப்பாக்கிகள் கொண்ட பொலீஸ் படை மோச மாகத் தாக்கியது. தோழர்கள் கே. ஏ. சுப்பிரமணியம், வீ. ஏ. கந்தசாமி, இ. கா. சூடாமணி ஆகியோர் இரத்தக் காயங்களுடன் பொலிஸ் நிலையத்திற்கு இழுத்துச் செல்லப் பட்டனர். முன்னணியில் சென்ற ஏனைய தோழர்களான டாக்டர் சு. வே. சீனிவாசகம், கே. டானியல், டி. டி. பெரேரா, எம். ஏ. சி. இக்பால், சி. கா. செந்திவேல், எஸ். ரி. என். நாகரட்ணம் ஆகி யோர் அடிகாயங்கள் அடைந்தனர். இருந்தும் பொலீஸ் அடக்கு முறையையும் தடையையும் மீறிப் பேரணி யாழ். முற்றவெளி யைச் சென்றடைந்தது. அங்கு பெரும் கூட்டத்தை நடாத்தியது.

மேற்படி கூட்டத்திலேயே சாதியத் தீண்டாமைக்கு எதிரான போராட்ட அறைகூவல் விடுக்கப்பட்டது. புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த தோழர் நா. சண் முகதாசன் தாழ்த்தப்பட்ட மக்கள் தமக்கு மறுக்கப்படும் உரிமைகளைப் போராடியே பெறவேண்டும் என்றும், ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் கொடுக்காதீர் அடிக்கு அடி திருப்பிக் கொடுக்கவேண்டும் என்றும், அதற்கு எமது கட்சி வழிகாட்டித் தலைமை தாங்கும் என்றும் தனது உரையில் உறுதிபடக் கூறினார். அதனை அங்கு திரண்டிருந்த சுமார் இரண்டாயிரத்திற்கு அதிகமான மக்கள் மிகப் பெரும் கரவொலி உற்சாகத்துடன் வரவேற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி வரலாற்றுக் குறிப்பு இங்கு சுட்டிக்காட்டப்படுவதற்குக் காரணம் இன்றைய இளம் தலைமுறையினருக்குத் தெரியப்படுத்துவதற்காகும். இதன் விரிவுபட்ட விடயங்கள் உள்ளடங்கிய நூலான 'சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்' எனும் நூலின் மூன்றாவது பதிப்பு விரைவில் வெளிவர உள்ளது. அதில் விபரங்களை விரிவாகக் காண இயலும்.

மேற்குறித்த 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியில் திரண்டிருந்த மக்களில் வடபுலத்துப் பின்தங்கிய கிராமங்களில் இருந்து வந்தவர்களில் கன்பொல்லைக் கிராமத்தின் இளைஞர்களும் இருந்தனர். அவர்களில் தோழர் ஆ. தங்கராஜா இருபத்திநான்கு வயது இளைஞராக இருந்தார். அப்போதைய சூழலில் நெல்லியடியின் கம்யூனிஸ்ட் இளைஞர்களுடன் கன்பொல்லையின் துடிப்பான இளைஞர்கள் இணைந்து நின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அன்றைய நாளில் நெல்லியடியின் தோழர் கு.சிவராஜா கன்பொல்லைத் தோழர்களில் சிவகுரு, தங்கராஜா ஆகியோரை அறிமுகப்படுத்தியிருந்தார். அதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த எமது அரசியல் கட்சிப் பணித் தொடர்பும், தோழர் தங்கராஜாவின் உயிர் பிரிவதற்கு ஆறு மணித்தியாலங்கள் முன்பு வரை நெருக்கமாக இருந்து வந்தமையும் இவ்வேளை நினைவு கூரவேண்டியதாகும். இவ் இறுதிச் சந்திப்பில் தோழர் செல்வமும் நானும் அவரைப் பார்ப்பதற்கு வீட்டிற்குச் சென்றபோது, கடும் சுகவீனமான நிலையில் கதிரையில் அமர்ந்திருந்தார். அவர் எம்மைக் கைகொடுத்து கட்டியணைத்துத் தனது இறுதி நேர தோழமை உணர்வை வெளிப்படுத்தியிருந்தமை எமது நீண்ட அரசியல் பயணத்தின் உணர்வு மிக்க நினைவையும் உத்வேகத்தையும் வெளிப்படுத்தியதுடன் எங்கள் கண்களைக் கலங்கவும் வைத்தது.

தோழர் தங்கராஜா ஒக்ரோபர் எழுச்சிக்குப் பின்னான வெகுஜனப் போராட்டங்களில் கன்பொல்லையின் கட்சி இளைஞர்களோடும் நெல்லியடியின் கட்சித் தோழர்களோடும் கலந்துகொண்டு முன்னணியில் இருந்துவந்தார். அவர் நல்ல பாடகர், ஆர்மோனியக் கலைஞர். 'கந்தன் கருணை' எனும் அம்பலத்தடிகளின் நாடகத்தின் கூட்டு முயற்சியில் தோழர் தங்கராஜாவிற்குப் பங்குண்டு. அவர் கட்சிப் பாடல்களை உச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதியில் பாடும் போது புரட்சிகர உணர்வு மேலெழும்புவதைக் காண முடியும்.

மேலும் நெல்லியடி நகரத் தேனீர்கடைகள் உணவ கங்களில் நடைமுறையில் இருந்து வந்த சாதியப் பாகு பாட்டையும் ஏற்றத்தாழ்வு கொண்ட தீண்டாமை நடை முறையினையும் உடைத்தெறிந்ததில் கன்பொல்லை மக்க ளுக்கும் அன்றைய இளைஞர்களுக்கும் உரிய வரலாற்றுப் பங்களிப்பு என்றுமே மறக்கப்படமுடியாதவையாகும். அவர்கள் முன்னணிப் பாத்திரம் வகிக்க நெல்லியடியின் மக்களும் கம்யூனிஸ்ட் இளைஞர்களும் கன்பொல்லை மக்களோடும் போராட்டங்களுடனும் இணைந்து நின்றனர். மேற்படி போராட் டம் வெடித்ததற்குப் பின்னால் ஒரு வரலாற்று முக்கியத்துவம் இருக்கிறது. 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியைத் தொடர்ந்து 1967ம் ஆண்டில் சங்கானை தேனீர்க்கடைச் சமத்துவப் போராட்டம் தொடங்கியது. சங்கானை நகரில் இருந்து வந்த தேனீர்க்கடைகளில் மக்கள், குறிப்பாக இளைஞர்கள் சென்று தேனீர் தரும்படி கேட்டனர். மறுப்பட்டது. சிலர் கடைகளைப் பூட்டிச் சென்றனர். அன்று இரவு சங்கானை நிற்சாமம் கிராமத்தின் மீது சாதி வெறியர்கள் பொலிஸாரின் மறைமுக உதவியுடன் தாக்குதல் மேற்கொண்டு வீடுகளை எரித்தனர். அதில் சின்னர் கார்த்திகேசு என்ற அறுபது வயது டையவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். அவர் ஒக்ரோபர் எழுச்சிப் பேரணியில் பங்கு கொண்ட ஒருவர். அவரது நினைவான 'சின்னர் கார்த்திகேசு அரங்கிலேயே' யாழ் மாநகர சபை மண்டபத்தில் 1967ல் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தோற்று விக்கப்பட்டு முதல் மாநாடு நடைபெற்றது என்பதும் வரலாறாகும். அக்கால கட்டத்திலேயே மட்டக்களப்புக் கவிஞர் சுபத்திரனால் 'சங்கானைக்கென் வணக்கம் சரித்திரத்தில் உன்நாமம்' என்னும் புகழ்பெற்ற கவிதை இயற்றப்பட்டுப் பின் இசைப்பாடலாகப் பாடப்பெற்றது.

இத்தகைய சங்கானைப் போராட்டம் ஏறத்தாழ மூன்று ஆண்டுகளின் பின் வெற்றி பெற்றது. அந்த வெற்றியினைக் கொண்டாடும் வகையில் சங்கானை நகரத்திலிருந்து கட்சியின் பேரணியும் நிற்சாமத்தில் தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையில் பொதுக்கூட்டமும் இடம்பெற்றது. அக் கூட்டத்தில் தோழர்கள் நா. சண்முகதாசன், சி. கா. செந்திவேல் உட்பட பல தோழர்கள் உரையாற்றினர். இவற்றுக்கு நெல்லியடி கன் பொல்லை கரவெட்டி கிழக்கு போன்ற கிராமங்களில் இருந்து பெருமளவில் மக்கள் இளைஞர்கள் வந்திருந்தனர். அவ்வாறு கன்பொல்லையில் இருந்து வந்த இளைஞர்களில் சிவகுரு தலைமையிலான துடிப்புமிக்க இளைஞர்களில் தோழர் தங்கராஜாவும் இருந்தார். மேற்படி கூட்டம் முடிவுற்ற பின் தோழர் சிவகுருவின் தலைமையிலான கன்பொல்லை இளை ஞர்கள் நெல்லியடித் தேனீர்க்கடைப் பிரவேசப் போராட்டத்தை முன்னெடுக்கும் கோரிக்கையை முன்வைத்தனர். இதனைக் கட்சியின் தலைமைக்குத் தெரியப்படுத்தி, உரிய முடிவை அறிவிப்பதாக அவர்களுக்குக் கூறப்பட்டது.

சிலநாட்களுக்குப் பின் அவர்களது கோரிக்கை கட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் கன்பொல் லையில் ஒரு ஆலோசனைக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. அக்கூட்டத்தில் கட்சித் தோழர்கள், வெகுஜன இயக்கத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். தோழர் தங்கராஜா அக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். ஏனைய தோழர்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்திப் பாதுகாப்பு வழங்கினர். தோழர் சி. கா. செந்திவேல் அவ்வேளை கட்சியின் முழுநேர ஊழியரும் வடபிராந்திய வாலிபர் இயக்கச் செயலாளருமாக இருந்தார். அவர் அக்கூட்டத்தில் சுமார் ஒரு மணி நேர உரையினை ஆற்றி தேனீர்க்கடைப் பிரவேசப் போராட்டத்தின் அவசியத்தையும் சங்கானைப் போராட்டத்தின் அனுபவத்தையும் எடுத்துக் கூறி யிருந்தார். அவ்வுரை இளைஞர்கள் மத்தியில் புரட்சிகர உணர்வையும் போராட்ட வேகத்தையும் ஏற்படுத்தியிருந்தது. ஆண்களும் பெண்களும் இளைஞர்களும் திரண்டிருந்த அக் கூட்டம் ஆண்டாண்டு காலமாக மறுக்கப்பட்டிருந்த சமத்துவ உரிமையினை வென்றெடுக்கும் ஓர்மத்தைத் தோற்றுவித் திருந்தது. அக்கூட்டத்தில் நெல்லியடித் தேனீர்க் கடைகள் உணவகங்களில் சமத்துவத்திற்கான இயக்கத்தை ஆரம்பிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கான ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டது. அதில் தோழர் தங்கராஜாவும் இடம் பெற்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லியடி சிறுநகரம். வடமாராட்சிப் பிரதேசத்தில் முக்கிய இடமாக இருந்து வந்தது. அதனால் மக்கள் அதிகமாக ஒன்று கூடுமிடமாகவும் சந்தை வியாபார நிலையங்களும் உணவ கங்களும் தேனீர்க் கடைகளும் இருந்து வந்தன. அவற்றில் தாழ்த்தப்பட்ட மக்கள் சமத்துவத்துடன் இருந்து தேனீர் அருந்தவோ உணவு உட்கொள்ளவோ முடியாது. நின்ற நிலையில் தேனீர் அருந்தவும் தரையில் இருந்து உணவு உட்கொள்ளவுமே அனுமதிக்கப்பட்டனர். தேனீர் பேணிகளில் வேறுபாடு கறாராகப் பேணப்பட்டு வந்தது. வடபுலத்தில் ஆலயம் மற்றும் தேனீர்கடைப் பிரவேச இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பெரும் சாதி வேளாளரான சித்த மணியக்காரரின் பேரரான மு. சிவசிதம்பரம் ஒருமுறை தானே முன்வந்து நெல்லியடி தேனீர்க் கடைகளில் சமத்துவம் பெற்றுத் தருவதாகக் கூறி சில தாழ்த்தப் பட்ட மக்களைத் தன்னுடன் கூட்டிச் சென்றார். ஆனால் அங்குள்ள எந்தவொரு தேனீர்க்கடையும் திறந்திருக்கவில்லை. கூட்டிச் சென்ற சிவசிதம்பரம் "நான் என்ன செய்வது கடைகளைப் பூட்டிச் சென்றுவிட்டார்களே" என்று கை விரித்துக் கொண்டார். இந்நிகழ்வு தாழ்த்தப்பட்ட மக்களை ஏமாற்றிக் கொண்டதாகவே அமைந்திருந்தது. அவ்வாறு பூட்டிச் செல்லப் பட்ட தேனீர்கடை ஒன்று அமைந்திருந்த இடத்திற்கு அண்மித் ததாகவே அதே சிவசிதம்பரத்திற்குச் சிலை வைக்கப் பட்டிருப்பதை இன்று காணமுடிகிறது.

ஆனால் நெல்லியடித் தேனீர்க் கடைகளில், உணவகங் களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளைப் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமையில் வென்றெடுக்கும் தேனீர்கடைப் பிரவேசப் போராட்டம் இடம்பெற்றது. இதில் கன்பொல்லை மக்களும் இளைஞர்களும் முன்னின்றனர். நெல்லியடியின் கம்யூனிஸ்ட் இளைஞர்கள், தோழர்கள் கு. சிவராஜா, கே. சிவஞானம் தலைமையிலும் பொலிகண்டி கம்யூனிஸ்ட் இளைஞர்கள் குணேந்திரராஜா, குட்டிக்கிளி ஆகியோர் தலைமையிலும் மற்றும் முற்போக்கான மக்களும் பக்கபலமாக இருந்தனர். கரவெட்டிப் பகுதியின் உயர் ஆதிக்க சாதியினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டியர்களை ஒன்று சேர்த்து கன்பொல்லை மக்கள் மீது கொடூரத் தாக்குதல்களைத் தொடுத்தனர்.

ஒருமுறை கன்பொல்லைக் கிராமத்தைச் சுற்றி வளைத்துத் தாக்கச் சென்ற சாதிவெறிக் காடையர்கள் மக்கள் கொடுத்த பலத்த அடிகளால் திக்குத்திசையறியாது காயங்களுடன் திரும்பிச் சென்றனர். பொலிசாரும் சாதி வெறியர்களின் பக்கமே நின்றனர். இருந்த போதிலும் கன்பொல்லை மக்களும் இளைஞர்களும் உறுதியுடன் ஒன்றிணைந்து புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சி – வெகுஜன இயக்க வழிகாட்டலில் சாதிவெறியர்களின் தாக்கு தல்களை முறியடித்தனர். இப்போராட்டத்தின் போது ஏற்பட்ட வெடி விபத்தில் சி. வேலும்மயிலும், மா. சீவரட்ணம், க. செல்வராசா ஆகிய மூன்று போராளிகள் உயிர் நீத்து தியாகிகள் ஆகினர். அவ்வெடி விபத்தின் பெரும் சத்தமானது அன்றைய சூழலில் கரவெட்டியின் சாதிமான்களையும் சாதிவெறிச் சண்டியர் களையும் கதிகலங்க வைத்ததுடன், போராட்டம் வெற்றி பெறத் திருப்பு முனையாகவும் அமைந்தது. இதே காலப்பகுதியில் கரவெட்டி கிழக்கு வளர்மதிக் கிராமத்தின் தாழ்த்தப்பட்ட மக்கள் யாக்கரைப் பிள்ளையார் ஆலயத்தில் உள்ளே சென்று வழிபட முற்பட்டபோது தடுத்து நிறுத்தப்பட்டனர். அம் மக்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றன. தாழ்த்தப்பட்ட இளைஞர்களும் திருப்பித் தாக்கினர். இதனைத் தொடர்ந்து மு. கந்தவனம் என்ற தாழ்த்தப்பட்ட இளைஞன் அங்குள்ள குளக்கரையில் குத்திக் கொல்லப்பட்ட சம்பவமும் இடம் பெற்றது.

கன்பொல்லை நெல்லியடித் தேனீர்கடைப் போராட்டம் வடமராட்சிப் பிரதேசத்தை மட்டுமன்றி முழு வடபுலத்தையும் ஒரு அதிர்வுக்கு உள்ளாக்கி நின்றது. அப்போராட்டத்தில் கன்பொல்லைக் கிராமத்தின் இளைஞர்களின் போராட்ட உறுதி யும் உழைக்கும் வர்க்கத்தின் புரட்சிகர உணர்வும் உச்சத்தில் இருந்ததனைக் காணமுடிந்தது. 'மக்களே, மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்தி' என்னும் மாஓவின் கூற்று நிதர்சனமாகி நின்றதைக் காண முடிந்தது. முற்றிலும் உழைக்கும் வர்க்கத் தினரான கன்பொல்லை மக்கள் தம்மைப் பிணைத்திருந்த சாதிய அடிமை விலங்கை உடைத்தெறிவதற்குத் தமது ஐக்கியத்தையும் போராட்டத்தையும் முன்னெடுத்திருந்தனர். அத்தகைய மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் உருவாகிய போராளியாகவே தோழர் தங்கராஜாவைக் காண முடிந்தது.

தோழர் தங்கராஜா புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தன்னைப் பிணைத்துக் கொண்டவர். அன்றிலிருந்து தனது இறுதி மூச்சுவரை கட்சியோடும் மக்களோடும் நெருக்கமாக இருந்து அரசியல் பணியாற்றியவர். ஆரம்ப காலம் தொட்டு கட்சியின் கூட்டங்கள் பேரணிகளில் முன்நிற்கும் தோழர்களில் தங்கராஜா உணர்வும் உற்சாகமும் கொண்டவராக இருந்து வந்தவர். முன்பு புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் என்பனவற்றில் தீவிர செயற்பாட்டாளராக இருந்து வந்த தங்கராஜா 1978ம் ஆண்டின் பின் உருவாகிய இன்றைய புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஆரம்பத் தோழர்களில் முக்கியமானவராக இடம் பெற்று அதன் வட பிராந்தியக் குழுவில் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுத் தொடர்ச்சியான கட்சிப் பணியாற்றி வந்தவர். அவரது பேச்சில் நிதானமும் தூர நோக்கும் கொள்கைப் பிடிப்பும் உறைந்து காணப்படும்.

கடந்த காலப் போராட்டங்கள் வெற்றி பெற்றுத் தாழ்த்தப் பட்ட மக்கள் தமது சமத்துவ உரிமைகளை வென்றெடுத்து நிலைநாட்டுவதற்கு இரத்தம் சிந்தியதோடு உயிர்த்தியாகங்களும் செய்தனர் என்னும் வரலாற்று உண்மைகள் இன்றைய புதிய தலைமுறையினருக்கு எடுத்துக் கூறப்படுவது அவசியம். ஏனெ னில் தமிழ் தேசிய ஆய்வாளர்களும் மேட்டுக்குடி கல்வி யாளர்களும் தாழ்த்தப்பட்ட தமிழர்களின் சமத்துவத்திற்கான போராட்ட வரலாற்றைப் பதிவுசெய்வதைப் புறம்தள்ளியே வந்தனர். தமிழ் மக்கள் மத்தியில் ஆண்டாண்டு காலமாக இரண்டு தமிழர்கள் இருந்து வந்தார்கள் என்பதையே நடை முறையில் சாதியமும் தீண்டாமையும் எடுத்துக்காட்டி வந்தன. தேனீர்க் கடைகளில் உள்ளே சென்று பித்தளை– வெள்ளிப் பேணிகளில் கதிரைகளில் அமர்ந்து தேனீர் அருந்தும் தமிழர்கள் இருந்தனர். அதே வேளை தேனீர் கடைக்கு வெளியே நின்றபடி வெற்றுச் சோடாப் போத்தில்களில் அல்லது கறள் கட்டிய பேணி களில் தேனீர் அருந்தும் தாழ்த்தப்பட்ட தமிழர்கள் இருந்தனர். ஆனால் தேர்தல்களில் வாக்குகள் பெறும்போது சாதித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீண்டாமை கடந்தே மேட்டுக்குடி உயர் ஆதிக்கச் சாதித் தமிழர் பிரதிநிதிகள் தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகள் பெற்றும் தமிழ் தேசிய ஆதிக்க அரசியல் மூலம் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் சென்று வந்தனர். இத்தகைய சாதிய ஏற்றத்தாழ்வையும் தீண்டாமையையும் 1966 ஒக்ரோபர் 21 எழுச்சிக்குப் பின்னரான வெகுஜனப் புரட்சிகரப் போராட்டங்களே முறியடித்தன. அறுபதுகளிலும் அதற்கு முன்பு இருந்து வந்த நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன.

பொது இடங்களில் சாதியத் தீண்டாமை மேற்கொள்ளப் படுவது அநாகரிகம் என்ற நிலை தோன்றியது என்றால் சாதிய வாதிகள் மனம் திருந்தியதினால் ஏற்பட்ட ஒன்றல்ல. அல்லது தமிழ் தேசிய கட்சிகளின் கருணையால் அல்ல. சிலர் வரலாற்றின் பக்கங்களை மறைத்துத் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தினால்தான் சாதிய தீண்டாமையில் மாற்றம் வந்ததாகக் காட்ட முற்படுகிறார்கள். தமிழ் இளைஞர்கள் ஆயுதங்கள் தூக்குவதற்கு முன்பே தாழ்த்தப்பட்ட மக்களும் இளைஞர்களும் தமது கைகளுக்குக் கிடைத்தவைகளைக் கொண்டு போராடியே தேனீர்க் கடைகளையும் ஆலயங்களையும் சமத்துவத்திற்காகத் திறக்க வைத்தனர் என்பதே வரலாறு. இத்தகைய வரலாற்றைத் தமிழ்த் தேசிய போராட்டம் பற்றி ஆராயும் எந்த ஆய்வாளர்களும் கவனத்தில் கொள்ளவோ பதிவாக்கவோ முற்பட்டதில்லை. அவர்களது ஆய்வுக் கண்களில் ஒரு கண்ணில் சுண்ணாம்பும் மறு கண்ணில் வெண்ணையும் கொண்டே நோக்குகின்றனர். உயர் சாதி மேட்டுக் குடித் தமிழ்த் தேசிய போராட்டம் புனிதமானது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களது போராட்டங்கள் இழிவானது. மேன்மக்கள் என்போர் போராடினால் அவர்கள் போராளிகள். தாழ்த்தப்பட்ட மக்கள் போராடினால் அவர்கள் சண்டியர்கள். இவையாவும் இரண்டு தமிழர்கள் என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகளே. தமிழ் தேசியத்தினதும் தமிழ்க் கூட்டமைப்பின் பெருந் தலைமைகள் எனப் போற்றப் பட்டுச் சிலைகள் வைக்கப்பட்ட தலைவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் உரிய பெரும் கோவில்கள் இன்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உட்செல்ல மறுக்கப்பட்டவைகளாகவே இருந்து வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்தவருடம் இந்த மணியகாரர் குடும்ப வாரிசான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருக்கு நெல்லியடியில் சிலை திறக்கப்பட்டது. இவ்வேளை ஒரு முக்கிய விடயம் நினைவுக்கு வருகிறது. அதாவது கன்பொல்லையில் நெல்லியடித் தேனீர் கடை சமத்துவப் போராட்டத்தில் தமது இன்னுயிர்களை ஈந்தவர்கள் சி. வேலும்மயிலும், மா. சீவரட்ணம், க. செல்வராசா ஆவர். அவர்களுக்குக் கன்பொல்லை மக்கள் கிராமத்தின் நுழைவாயில் பகுதியில் தமது சொந்தக் காணியில் மூன்று சீமெந்தில் செதுக்கப்பட்ட சிலைகளை வைத்தனர். சிலை திறப்பு விழாக் கூட்டத்தையும் நடாத்தியிருந்தனர். ஓரிரு மாதங்களில் மேற்படி சிலைகளின் தலைகள் உடைக்கப்பட்டன. இன்றும் உடைக்கப்பட்ட சிலைகள் அந்த இடத்தில் இருந்து வருகின்றன. மக்களோடு மோத முடியாதவர்களான சாதி ஆதிக்க வாதிகள் போராட்டத் தியாகிகளான அம்மூவரின் சிலைகளை உடைத்துத் தமது சாதி வெறி வக்கிரத்தைத் தீர்த்துக்கொண்ட நிகழ்வும் வரலாற்றுப் பதிவிற்கு உரியதாகும். இச் சிலைகள் வைப்பும் சிலைகள் உடைப்பும் 1979ம் ஆண்டில் இடம் பெற்றவையாகும்.

இவையாவும் தமிழ் தேசியத்தின் பிற்போக்குத் தனத்தையே எடுத்துக்காட்டி நிற்கின்றன. இன்றும் அதன் அடிப்படைகளும் செயற்பாடுகளும் மாறவில்லை. பழைய தலைவர்கள் மறைந்து புதிய தலைவர்கள் வந்த போதிலும் நிலவுடைமை வழிவந்த பிற்போக்குத் தமிழ்த் தேசியம் எவ்வகையிலும் மாற்றமடைய வில்லை. அரசியல் சமூகப் பண்பாட்டுத் தளங்களில் உள்ளார்ந்த பிற்போக்குக் கூறுகளையே கொண்டுள்ளன. இப் பிற்போக்குத் தமிழ் தேசியத்திற்குக் குடை பிடிப்பதில் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் கல்வி, பொருளாதார, பண்பாட்டு நிலைகளில் மேனிலையாக்கம் பெற்றவர்களில் சிலர், தொழுது நிற்கும் நவீன அடிமைத்தனத்தையும் காணமுடிகிறது. இவற்றைப் பற்றிப் பேசும் போது தோழர் தங்கராஜா சினத்துடனும் கோபத்துடனும் "இத்தகையவர்கள் ஒரு போதும் திருந்தமாட்டார்கள். இவர்களது அடிமைப் புத்தி என்றுமே மாறமாட்டாது. இவர்களை நவீன தாழ்த்தப்பட்ட அடிமைகள் என்றே அழைக்கவேண்டும்" என்றே கூறிக்கொள்வார். அவர் என்றுமே தனது கம்யூனிஸ்ட் நிலைப் பாட்டிலிருந்து விலகி நின்றது கிடையாது. உழைக்கும் மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுவான போராட்டமும் அதிகாரத்தை வென்றெடுக்கும் கொள்கையுமே அடிப்படையான நிலைப்பாடு என்பதில் தோழர் தங்கராஜா என்றும் மாறவில்லை. ஒருமுறை தோழர் தங்கராஜாவைக் கௌரவித்து கன்பொல்லையில் நிகழ்வு ஒன்றில் விருது வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதனை தமிழ்த் தேசியக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா வழங்குவதாக ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் தோழர் தங்கராஜா அவ் விருது வாங்குவதை நிராகரித்ததுடன் நிகழ் விற்குச் செல்லவும் இல்லை.

தோழர் தங்கராஜாவை நினைவு கூரும் போது அவருடன் இணைந்து அரசியல் சமூகப் பணியாற்றிப் போராளிகளாக முன்னின்ற தோழர்களின் நினைவுகள் கண்முன்னே விரிகின்றன. தோழர்கள் சிவகுரு, சிவபாதம், கே. எஸ். இரத்தினம், பரமு, செல்லக்கிளி, வேலுப்பிள்ளை, புலேந்திரன், லிங்கம், இளைய தம்பி, அமுதா, நல்லதம்பி, கிளியன், கொழும்பான், மற்றும் அன்றைய சூழலில் போராளிகளாகவும் சமூக அக்கறையாளர்களாகவும் முன்னின்றவர்களை எவ் வகையிலும் மறக்க முடியாது. அக்கிராமத்தைச் சேர்ந்தவர்களான தவராஜா, அதிபர் இராஜரட்ணம் ஆகியோர் பழைய கம்யூனிஸ்ட் கட்சி சிறுபான்மைத் தமிழர் மகாசபையைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியும் தீண்டாமை ஒழிப்பு வெகு ஜன இயக்கமும் முன்னெடுத்த கன்பொல்லை நெல்லியடி தேனீர்க்கடைப் போராட்டத்திற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கினர். அதேபோன்று உயர் சாதியினர் எனப்பட்டவர்கள் மத்தியில் இருந்து வந்த இடதுசாரியினரும் ஜனநாயக விரும்பி களும் ஆதரவு வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்படி கன்பொல்லை- நெல்லியடித் தேனீர்க்கடைப் பிரவேசப் போராட்டம் வடமராட்சியின் சாதியத் தீண்டாமை வட்டாரங்களில் கடும் அதிர்வலைகளைத் தோற்றுவித்தது. அதன் காரணமாகவே பருத்தித்துறை உள்ளிட்ட தேனீர்க்கடைகளில் சமத்துவம் நிலை நிறுத்தப்பட்டது. வல்லிபுர ஆழ்வார் கோவில், செல்வச் சந்நிதி, பொலிகண்டி கந்தசாமி கோவில் உள்ளிட்ட வேறும் கோவில்கள் திறந்துவிடப்பட்டன. இந் நிலைக்கு இப் போராட்டக் களம் உந்து சக்தியாகத் திகழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியத் தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களுக்குப் பின்னரான, இன ஒடுக்குமுறையினை எதிர்த்த புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியும் அதன் வெகுஜன அமைப்புகளும் முன்னெடுத்த அத்தனை போராட்டங்களிலும் தோழர் தங்கராஜா முன்னின்று வந்தவர். கேப்பாப்பிலவு, வவுனியா, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் இடம்பெற்ற கவனயீர்ப்புப் போராட்டங்களில் எல்லாம் ஓர் இளைஞன் போன்று பங்குபற்றி வந்தவர் தோழர் தங்கராஜா. தோழர் தங்கராஜா போராட்டங்களில் மட்டுமன்றி ஒரு பாடகர், ஆர்மோனியக் கலைஞர் என்ற நிலையில் கட்சியின் மேடைகளில் பாடுவார். 2016ம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் யாழ் றிம்மர் மண்டபத்தில் 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியின் 50வது ஆண்டு நினைவுக் கூட்டம் இடம்பெற்றது. அக் கூட்டத்தில் தோழர் தங்கராஜா தனது தனித்துவக் குரலில் மாவிட்டபுரப் போராட்டத்தில் திருகோணமலைக் கவிராயர் எழுதிய அருமையான பாடலான "மாவிட்டபுரத்திலோர் மந்தி நின்று மடைச் சேட்டை புரியுது வாசலில் குந்தி" என இராகத்துடன் உச்ச சுதியில் பாடினார். அப்பாடலைக் கேட்டுச் சபை கரவொலி எழுப்பியது. அதேபோன்று புத்தூர் மயானப் போராட்டத்தின் போதும் மேதினக் கூட்டங்களிலும் தோழர் தங்கராஜாவின் பாடல்கள் இருந்தே தீரும். அவ்வாறு எங்கள் மத்தியில் உறுதிமிக்க கட்சித் தோழராகவும், போராளியாகவும் பாடகர் கலைஞராகவும் வாழ்ந்து தனக்கெனத் தனி இடத்தை வைத்திருந்த தோழர் தங்கராஜாவின் வாழ்வும் நினைவுகளும் எங்கள் மத்தியில் என்றும் வாழ்ந்துவரும்.

தோழர் தங்கராஜா இறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்பு ஒரு முறை எனது வீட்டிற்கு வந்திருந்த போது இன்றைய அரசியல் நிலை பற்றியும் மேலும் கட்சி பற்றியும் வேலை முறைகள் சம்பந்தமாகவும் நீண்டநேரம் கலந்துரையாடினார். கன்பொல்லைக் கிராமத்தின் தற்போதைய நிலை பற்றியும் பேசிக் கொண்டார். அவ்வேளை தனது கவலையையும் பகிர்ந்து கொண்டார். தனக்குப் பின் தன்னைப் போன்ற ஒரு தோழர் இல்லாமல் போய்விடக் கூடும் என்று கூறி மனம் வருந்தினார். தானே கன்பொல்லைக் கிராமத்தின் கடைசிக் கம்யூனிஸ்டாகி விடக்கூடாது என்றும் இன்றைய இளைஞர்கள் கடந்த காலத்தின் நினைவுகளை முன்னெடுக்காமல் சிறிய சிறிய விடயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுவதையும் வேதனைப்பட்டவாறு கூறிக்கொண்டார். நான் அவரைத் தேற்றி தோழர் நிச்சயம் எமது கடந்த கால வேலைமுறைகளுக்கும் சேவைகளுக்கும் போராட்டங்களுக்கும் இளைஞர்கள் நிச்சயம் முன்வந்து உங்கள் இடத்தை நிரப்பு வார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தேன். அவர் பழைய நினைவுகளை மீட்டு நாம் எத்தனை தடைகள் துயரங்கள் உயிரா பத்துக்களைத் தாண்டி வந்தோம். எனவே நாங்கள் இறுதிவரை உறுதியுடனும் உற்சாகத்துடனும் இருப்போம் என்றவாறே விடை பெற்றுச் சென்றார். தோழர் தங்கராஜா எமது கட்சியினதும் அக் கிராமத்தினதும் உறுதிமிக்க தோழராகவே மறைந்தார். ஆனால் வரலாறு என்பது போராளிகள், தியாகிகள், கம்யூனிஸ்டுகளுடன் முடிவடைவதில்லை. அவ் வரலாற்றுத் தொடர்ச்சியில் புதியவர்கள் வரவே செய்வர். அதற்குரிய காலம் கனியவே செய்யும்.

இன்றைய அரசியல் பொருளாதார சமூகச் சூழலின் நச்சுப் போக்குகளையும் மாயத் தோற்றங்களையும் கடந்து இளை ஞர்கள் சிந்திக்கவும் செயற்படவும் முன்வந்தே தீருவார்கள். ஏனெனில், இன்றைய இளைஞர்களில் பெரும் பகுதியினர் உழைக்கும் மக்களினதும் ஒடுக்கப்படும் சமூகச் சூழலிலும் உள்ளவர்களேயாவர். எனவே அத்தகைய இளைஞர்கள் சமூக மாற்றத்தையும் சமத்துவத்தையும் தரவல்ல உழைக்கும் வர்க் கத்தின் அதிகாரத்தை வென்றெடுக்க அணிதிரள்வார்கள். அப் போது கொள்கையில் உறுதியும் நடை முறையில் நேர்மையும், வாழ்க்கையில் எளிமையும் இறுதிவரை செங்கொடி தாங்கியும் நின்ற தோழர் தங்கராஜாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வழி நடப்பர் என்பதில் எம் அனைவருக்கும் நம்பிக்கை உண்டு. அத்தகைய நம்பிக்கையுடன் அவரது முதலாம் ஆண்டு நினை வினை முன்னெடுப்போம். அவருக்கு எமது தோழமைமிக்கச் செவ்வணக்கத்தைத் தெரிவிப்போம்.

வாழ்க தோழர் தங்கராஜாவின் நாமம்
வளர்க புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மாற்றத்திற்கான இசைக் கலைஞர் தோழர் தங்கராஜா

○ க. தணிகாசலம்
பிரதம ஆசிரியர், 'தாயகம்' கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்
தலைவர், தேசிய கலை இலக்கியப் பேரவை

மக்கள் மனங்களை இலகுவில் ஈர்க்கும் நுண் கலைகளுள் இசையே முதன்மையானது. ஏனைய கலைகளைவிட இசைக் கலைக்கு மக்கள் மனங்களைத் தன் வசமாக்கும் ஆற்றல் உண்டு. ஒருங்கிசைந்த தாளலயத்துடன் அமைந்த பாடல்கள் மக்களை எழுந்து ஆடவைப்பது போலவே, உயர்ந்த கருத்தாளம் பொதிந்த சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் கவிதைகள் இசை வடிவ மாகும் போது மக்களின் உணர்வுகளைத் தொட்டுச் செழுமைப் படுத்தும். சமூக விடுதலைக் கருத்துக்களும் மக்களை இலகு வாகச் சென்றடையும்.

"தனியுடமைக் கொடுமைகள் தீர
தொண்டு செய்யடா
தானா எல்லாம் மாறும் என்பது
பழைய பொய்யடா"

இவை சிறுவர்களை நோக்கிப்பாடும் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பிரபல்யமான சினிமாப் பாடல் வரிகளில் சில. இன்றும் கூட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளிற் பெரும்பாலானவற்றிற்கு அடிப்படையாவது தனியுடைமை. காலம் தோறும் மக்கள் வாழ்வில் சிறுசிறு மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள் ளபோதும், அவைகள் கூட மக்களின் ஒன்றுபட்ட போராட்டங் களாற் தான் ஏற்பட்டுள்ளன. எனவே அடிப்படைச் சமூக மாற்றம் ஏற்படாதவரை மக்கள் எதிர் நோக்கும் ஒடுக்குமுறைகளும், துய ரங்களும் விலகப்போவதில்லை. இன்றும் இன, மத, சாதி, பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகளால் மக்கள் மத்தியில் பிளவுகளும், போராட் டங்களும், சாவுகளும், துயர்களும் நிகழ்ந்த வண்ணமே உள்ளன.

இத்தகைய கொடூரமான சமூக அமைப்பை மாற்றி அமைக்க முடியும் என்ற நம்பிக்கையுடனும் துணிவுடனும் மக்கள் மத்தியிற் செயற்படும் தோழர்களில் ஒருவராக தோழர் தங்கராஜா வாழ்ந்தார். ஆர்மோனியப் பெட்டியை எடுத்துக்கொண்டு யாழ் நகர மண்டபங்களில் மட்டுமல்ல கிராமங்கள் தோறும் தனது குரலிசையால் மக்களின் உள்ளங்களில் சமூக மாற்றச் செயற் பாட்டுணர்வைச் செழிக்கச் செய்தார்.

'மாறும் உலகம் புரட்சியிலே– இங்கு
மலர்ந்திடும் உழைப்போர் சமுதாயம்'

என்ற புரட்சிப் பாடலைச் சினிமாப் பாடல் மெட்டில் தோழர் தங்கராஜா பாடும்போது மக்கள் மனங்களில் விரியும் நம்பிக்கை சிறப்பானதாகும்.

'பஞ்சமுண்டு பசியுண்டு பாரு தோழா?
பாழும் உலகை மாற்றப் போராடு தோழா'

என்ற பாடலும் இளைஞர்களைச் சமூகமாற்றத்துக்கான போராட்டங்களில் பங்குகொள்ள உந்தித் தள்ளும் பாடலாக அமையும்.

அறுபதுகளில் நடந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜனப் போராட் டத்திற் பெரும் எண்ணிக்கையான மக்கள் கிராமங்கள் தோறும் அணிதிரண்டனர். அன்றிருந்த சமூக ஒடுக்குமுறைச் சூழலில் பெரும் மாறுதலை ஏற்படுத்திய அப்போராட்ட உணர் வுக்கு வலுச்சேர்த்த பாடல்களாக–

'சங்கானைக் கென்வணக்கம்
சரித்திரத்தில் உன்நாமம்'

என்ற பாடலும்,

'மாவிட்டபுரத்தில் ஓர் மந்தி– நின்று
மடைச்சேட்டை புரியுதே வாசலில் குந்தி'

என்ற பாடலும் பிரபலமடைந்தன. இப்பாடல்களை மேடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிற் பாடிய ஒரு சிலருள் தோழர் தங்கராஜா ஒருவராக இருந்தார்.

கன்பொல்லைத் தியாகிகள் உட்பட, இப்போராட்டங்களிற் பங்கு கொண்டு மறைந்த தோழர்களை நினைந்து தானாகவே பாடல் இயற்றி மெட்டமைத்து உணர்வோடு கலந்து பாடிய பாடல்கள் இன்னும் எமது காதுகளில் ஒலிக்கும் வகையில் அமைந்தன. தோழர் தங்கராஜா எனும் மக்கள் விடுதலைக் கலைஞனின் நினைவும் வாழ்வும்

'என்று தணியும் எங்கள்
சுதந்திர தாகம்
என்று மடியும் எங்கள்
அடிமையின் மோகம்"

என்ற பாரதியின் பாடல் அடிகளைப்போல் சமூக விடுதலைக்கான நம்பிக்கையை இன்றைய இளைய தலை முறையினருக்கு என்றும் தந்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவழியாத் தோழர் தங்கராஜா

○ செல்வம் கா. கதிர்காமநாதன்
வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்,
வடபிராந்தியச் செயலாளர், பு.ஜ.மா.லெ. கட்சி

வடமாராட்சிப் பகுதியில் உறுதிமிக்கப் பொதுவுடமைத் தோழராக வாழ்ந்து மறைந்தவர் தோழர் ஆ. தங்கராஜா. 1960ம் ஆண்டுக் காலப்பகுதியில் தமிழர்கள் மத்தியில் இருந்து வந்த தீண்டாமை சாதிக் கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து வந்தவர்களில் ஒருவர். அன்று இளைஞனாக இருந்த அவர் ஏனைய கன்பொல்லை இளைஞர்களுடன் இணைந்து அன்றைய காலகட்டத்தில் சமூக விடுதலைப் பணியில் செயற்பட்டு வந்தவர் என்பது வரலாறு.

நெல்லியடி தேனீர்க்கடைகளில் சமத்துவம், ஆலயங்களில் சமத் துவம், பொது இடங்களில் சமத்துவம் இருக்கவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாரபட்சம், பாகுபாடு காட்டக்கூடாது என்பதால் இளமைக் காலத்தில் சமூக நீதிப் போராட்டங்களில் ஏனைய இளைஞர்களுடன் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டலில் பங்குபற்றி வந்துள்ளமையானது என்றும் நினைவில் கொள்ள வேண்டியதாகும்.

வடமாராட்சியில் கன்பொல்லைக் கிராமத்தில் துணிவுடன் இளைஞர்களைத் தயார்படுத்திச் சமூக விடுதலைப் போராட் டத்தில் பங்கு கொள்வதில் முன்னின்றவர். சாதியத்தால் புறக் கணிக்கப்பட்ட கன்பொல்லை கிராமம் போன்று ஏனைய கிராமங்களிலும் சமத்துவத்தைக் கொண்டுவரவேண்டும் என்பதில் உறுதியுடன் இருந்து வந்தவர். அதற்காகப் பலரது உயிர்கள் தியாகம் செய்யப்பட்டன. சாதி வெறியர்களின் ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடிய கிராமங்களில் கன்பொல்லைக் கிராமம் என்றும் வரலாற்றுப் பதிவுகளில் இருக்க வேண்டியதாகும். அதனை இன்றைய இளம் தலைமுறையினர் மத்தியில் தெரியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்த வேண்டியதும் தோழர் தங்கராஜா போன்ற சமூகப் போராளிகளின் அர்ப்பணிப்புகளும் மறக்க முடியாதவையாகும். அன்றைய போராட்டத்தில் அவருடன் இணைந்து போராடிய மூன்று இளைஞர்கள் குண்டு வெடித்து உடல் சிதறி சமூக விடுதலைக்காக தம் உயிர்களைத் தியாகம் செய்தார்கள். தொடர்ந்து போராடி வெற்றியும் பெற்றார்கள் என்பது கன் பொல்லைக் கிராமத்திற்குச் சிறப்பான வரலாறாக இருக்கின்றது. அன்றைய சாதி சமத்துவத்திற்கான போராட்டத்தில் வெற்றி பெற் றதன் மூலமாகத் தனது கிராமத்தை கல்வியிலும் பொருளா தாரத்திலும் கலாசாரத்திலும் மாற்றங்களைக் கொண்டு வருவ தற்காகக் கிராம மக்களுடன் இணைந்து மக்களோடு மக்களாக நின்று செயற்பட்டதிலும் கிராமத்தில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன என்பதும் வரலாற்றுப் பதிவாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

ஒடுக்கப்பட்டவர்களின் சமத்துவத்திற்காகத் தன்னை அர்ப்ப ணித்துப் போராட்டப் பாதையில் பயணிப்பது சிறிய விடைய மாகக் கருத முடியாது. தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்தில் ஏனையோருக்கு அநீதி இழைக்கப்படும்போது மக்களைத் தயார்படுத்தி அவர்களுக்கு நிலமையை விளங்கவைத்து மக்களை ஒன்றுதிரட்டிப் போராட வைத்ததின் மூலம் கன்பொல்லைக் கிராமம் சிறப்பு அடைந்து கொண்டது.

தோழர் தங்கராஜா அவர்களின் சிறப்பு என்னவெனில் இளைஞனாகப் பொதுவுடமைக் கொள்கையைத் தெரிவு செய்து முதலில் புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் அதனைத் தொடர்ந்து புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியிலும் இணைந்து செயற்பட்டுவந்தார். இறுதிக் காலம் வரை ஒரே கொள்கையுடனும் ஒரே கட்சியுடனும் செயற்பட்டு வந்துள்ளார். பணம் பொருட்களுக்காகக் கட்சிகளுக்குத் தாவவில்லை. தேர்தல் காலங்களில் சலுகைகளுக்காகக் கொள்கை மாறி, கட்சி மாறி நிற்கவில்லை. வறுமையில் இருந்த வேளையில் குடும்பத்தை உயர்த்துவதற்காகப் பணக்காரக் கட்சிகளை நாடவில்லை. தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான கொள்கைப் பற்றுடன் செயற்பட்டவர் தோழர் தங்க ராஜா. அவர்களின் சமூக விடுதலைப் போராட்டம் கிராமத்தின் மாற்றத்திற்கான கட்சிப் பணியில் அவருடைய மனைவி பெற் றோர் உறவினர்கள் பக்கபலமாக இருந்து வந்துள்ளார்கள். தோழர் தங்கராஜா அவர்களின் பிள்ளைகள் அவருக்கு ஆதரவாகவும் அவர்மீது அளவு கடந்த மதிப்பும் மரியாதையும் பாசமும் கொடுத்து வந்துள்ளார்கள்.

இதன்மூலம் அவரால் பொதுவுடைமைவாதியாக மாக்சிச லெனினிசக் கட்சியுடன் இறக்கும் வரை நின்று பிடிக்க முடிந்தது என்பதை தோழர் தங்கராஜா அவர்களின் நினைவுப் பதிவிலே கூறிக்கொள்ள முடியும். நான் கட்சியில் இணைந்து செயற்பட்ட காலத்தில் இருந்து அவரது இறுதிக்காலம் வரை மிகவும் உயர்ந்த நட்புக் கொண்ட தோழராக இருந்து வந்துள்ளார். எங்கள் கிரா மத்தில் இடம்பெற்ற மயானப் போராட்டத்தில் பங்குபற்றி ஆதரவு தெரிவித்துப் பல பாடல்களைப் பாடி மக்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தினார். அத்துடன் கன்பொல்லை இளைஞர்கள் அப் போராட்டத்திற்கு வருகை தந்து போராட்ட நிதி வழங்கியமையும் நினைவுகூரத்தக்கதாகும்.

அவர் ஆர்மோனிய இசைக் கலைஞராக விளங்கி கலா பூசணம் விருதும் பெற்றுக்கொண்டது அவருக்குரிய அங்கீகார மாகும். கலைத்துறையில் தன்னை ஈடுபடுத்தி தன்னை வளர்த்துக் கொண்டவர். நாடகங்கள் மற்றும் இசைக் கச்சேரி களில் அவர் ஆர்மோனியம் வாசிப்பது வழக்கம். நாட்டில் பல போராட்டங் களும் உயிர்த் தியாகங்களும் ஏற்பட்டது வரலாறு. அது போன்று சாதி சமத்துவத்திற்காகப் போராளிகள் போராடித் தியாகம் செய்துள்ளமையும் வரலாறு. இதில் கன்பொல்லைக் கிராமமும் மக்களும் சமூக விடுதலை பெறப் போராடினார்கள். உயிர்த் தியாகம் செய்தார்கள். உடலில் போராட்டத் தளும்புகள் பெற்றனர். அங்கவீனர்கள் ஆகினர். வறுமையை அனுபவித்தனர். தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டனர். பொலிசாரின் அடக்குமுறை களுக்குத் துணிவுடன் முகம் கொடுத்து நின்றார்கள். மனிதனை மனிதன் மதித்து நடந்தார்கள். முடிந்தளவிற்கு கிராமத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்ற முயன்றனர். இடைப்பட்ட காலத்தில் நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக கிராமங்களின் ஐக்கியம் – ஒற்றுமை சிதைந்தது. இதன்மூலம் சில பிரிவுகளாகச் செயற்பட யுத்த சூழலும் காரணமாகியது.

இத்தகைய சூழலிலும் எமது கட்சியின் அடையாளமாக மக்களின் தோழனாக தங்கராஜா வாழ்ந்து மறைந்தார். அவருடைய வாழ்வையும் அனுபவத்தையும் இந்தச் சமூகத்திற்குப் பயனுள்ளளதாக ஆக்க வேண்டும். இன்றைய இளம் தலைமுறையினர் தோழர் தங்கராஜா அவர்களின் போராட்டப் பண்புகளையும் செயற்பாடுகளையும் பின்பற்ற வேண்டும். இன்றைய கால நிலமைகளுக்கு ஏற்ற வகையில் புதிய மாற்றங்கள் ஏற்படுத்த இளைஞர்கள் முன்வர வேண்டும். கிராமத்தை அறிவு பூர்வமாகவும் கல்வி ஊடாகவும் முன்னெடுக்க வேண்டும். சிறு சிறு முரண்பாடுகளை எல்லாம் கைவிட்டு அமைப்புவாயிலாகக் கிராமம் ஐக்கியப் படவேண்டும். கடந்த காலங்களில் சாதிப் பாகுபாடுகளுக்கு எதிராகத் தலைமை தாங்கி முன்னின்று செயற்பட்டு வந்த கன்பொல்லைக் கிராமம் இன்று நாட்டின் உழைக்கும் மக்களின் விடுதலைக்கும் சமூக மாற்றத்திற்கும் பணியாற்ற முன்வர வேண்டும். அத்தகைய இளைஞர்களுடன் எமது கட்சி இணைந்து செயல்படும். அதன்மூலம் இக்கிராமம் மேலும் வரலாற்றுத் தொடர்ச்சியுள்ள கிராமமாகவும் மக்களாகவும் இருக்க முடியும் என நம்புகின்றேன்.

அந்த வகையில் தோழர் தங்கராஜா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவில் கன்பொல்லை கிராமத்து இளைஞர்களாகிய நீங்கள் ஐக்கியப்பட்டு செயற்பட முன்வரவேண்டும். சமூ நீதிக்காக ஒன்று படுவதும் போராடுவதும் காலத்தின் தேவையாக உள்ளது.

தோழர் ஆ. தங்கராஜா அவர்களுடன் நான் பழகியதும் அரசியல் பயணத்தில் பங்குபற்றிப் பயணித்ததும் சிறந்த அனுபவங்களைத் தந்துள்ளதாக உணர்கின்றேன். அவரின் தியாக உணர்வும் அவரின் விடுதலை எண்ணங்களும் எங்களுக்கும் பயனுள்ளதாக அமைந்ததினை நினைவாகப் பகிர்ந்து கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்பொல்லை மண்ணிலிருந்து விடுதலை விருட்சங்கள் தோன்றும்

ㅇ டேவிட் சுரேன்
உக்குவளை பிரதேச சபை உறுப்பினர்,
மலையகப் பிராந்தியச் செயலாளர், பு.ஜ.மா.லெ.கட்சி

மரணங்கள் இயற்கையாகவும் செயற்கையாகவும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

மரணிப்பவர்களில் ஒரு சிலரைத்தான் உலகம் நினைவில் வைத்துக் கொள்கிறது. அப்படிப்பட்டவர்களில் ஒருவர்தான் தோழர் ஆ. தங்கராஜா.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மூத்த உறுப்பினராகவும் வடபிராந்திய குழுவின் உறுப்பினராகவும் இருந்து பணி செய்தவர். 1966 இல் இடம்பெற்ற தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிரான அக்டோபர் எழுச்சியில் முன்னணியில் இருந்த சமூகப் போராளி. அன்றிலிருந்து அவர் இறக்கும் வரை வடக்கில் இடம்பெற்ற பல போராட்டங்களில் முன்னணியில் இருந்த தோழராக அறியப்பட்டவரே தோழர் ஆ. தங்கராஜா ஆவார்.

ஆர்மோனிய வாத்திய கலைஞரான இவர் சமூகம் சார்ந்தும் கட்சியினதும் பாடல்களைப் பாடி சிந்திக்க தூண்டுபவராகவும் இருந்து வந்துள்ளார். கட்சியின் நிகழ்வுகளில் நாம் அவரை சந்திக்கும் போது வடக்கிற்கு வெளியே பணிச்செய்யும் தோழர்களிடம் விஷேடமாக உரையாடி அன்பும் தோழமையும் காட்டும் தோழராக இருந்துள்ளார். இளம்பராயத்தில் மாக்சிய நடைமுறையின் பால் ஈர்க்கப்பட்ட தோழர் தங்கராஜா இறுதிவரை அச்சித்தாந் தத்தை பற்றிப் பிடித்தவராக அர்த்தமுள்ள வாழ்வு வாழ்ந்தவராக விளங்கி நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய இளம் தலைமுறையினர் தோழர் ஆ. தங்க ராஜாவிடம் இருந்து கற்க வேண்டிய படிப்பினைகள்நிரம்பக் காணப்படுகின்றன. இவரின் வழியைப் பின்பற்றி கன்பொல்லை மண்ணிலிருந்து விடுதலை விருட்சங்கள் தோன்றும் என்பதில் நம்பிக்கை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வில்லாத போராளி

○ சு. பொன் பொஸ்கோ
தேசிய கலை இலக்கியப் பேரவை, வவுனியா

**தோ**ழர் தங்கராசா ஒரு மாக்சிசப் போராளி. சமூக மாற்றத்திற்காக – உழைக்கும் மக்களின் விடுதலைக்காக தனது வாழ்நாள் முழுவதும் செயற்பட்டு வந்தவர். அவரது எளிமையான தோற்றம் எல்லோரையும் கவரும். வெள்ளை வேட்டி, வெளிர் நிற நீளக்கை சேட்டு, வகிடு பிரியாமல் பின்புறமாக வாரிவிடப்பட்ட தலை, தோழமையான புன்முறுவல், மனம்நோகாத சிந்திக்க வைக்கும் உரையாடல்.

தோழர் தங்கராசா வடமராட்சிப் பகுதியை பிரதிநிதித்துவப் படுத்திய தோழர். முதல் முதலாக சுமார் 45 வருடங்களுக்கு முன் இலங்கை வாலிபர் சங்க சம்மேளன மாநாட்டில் கலந்து கொண்டபோது அவரை அறிந்துகொண்டேன். அன்றும் புரட்சிகர பாடல்களைப் பாடினார். இன்றுவரை அவர் பாடிய புரட்சிகர பாடல்கள் என் மனதைவிட்டு நீங்காமல் நிற்கின்றது. அவரது இனிய குரல்வளம் கட்சி நிகழ்வுகளில் புரட்சிக் கீதங்களை இசைக்கத் தவறுவதில்லை. தனது தனித்திறமையை கட்சியின் கொள்கையைப் பரப்புவதற்காக பயன்படுத்தியவர்.

தோழர் நவரத்தினத்தின் மறைவின் முதல் மாத நினைவஞ்லி நிகழ்வின்போது, மறைந்த தோழர் நவம் பற்றி அவர் இசைய மைத்துப் பாடிய பாடல் இழப்பின் வேதனையையும் புரட்சிகர மாற்றத்திற்கான ஓர்மத்தையும் செவிவழியே உள்ளத்தில் ஊட்டியது. இன்றும் நெஞ்சைவிட்டு அகலாது நிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை உழைப்பாளி மக்களின் விடுதலைக்கு, மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனையே வழிகாட்டும் என்பதை உறுதியாக நம்பி வழிநடந்தவர் தோழர் தங்கராசா. இலங்கை கம்யூனிஸ்ற் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ற் கட்சி (இடது), புதிய – ஜனநாயகக் கட்சி, புதிய – ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி என கட்சியின் 40 வருடகால வளர்ச்சிப்பாதையில் தனது புரட்சிகரப் பயணத்தை சலனமின்றித் தொடர்ந்தவர்.

சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும் என்ற சமூக நீதிக்கான போராட்டத்தை கட்சி கையில் எடுத்தபோது முன்னணிப் போராளியாக செயற்பட்டவர். தமிழர் மத்தியிலே உயர்சாதித் தமிழன், தாழ்ந்த சாதித் தமிழன் என்று பிரிந்து நின்றபோது இச் சமூகக் கொடுமை இழிந்தது, இதற்கெதிராக போராட வேண்டும், ஒரே தமிழர் என ஓங்கியறையும் நிலை ஏற்படவேண்டும் என போராடியவர். வடமராட்சிப் பகுதியை – குறிப்பாக கன்பொல்லைக் கிராமத்தை உறுதி குலையா ஐக்கியத்துடனும் உருக்குப்போன்ற பலத்துடனும் சாதிவெறிக்கு எதிராக அணிதிரட்டியவர்களில் தோழர் தங்கராசா முதன்மை யானவர்.

ஆற்றல் மிகு கரங்களிலே ஆயுதங்கள் ஏந்துவதே மாற்றத் துக்கான வழி, மாற்றுவழி ஏதுமில்லை எனச் சாதி அமைப்பைத் தகர்ப்பதற்கு கன்பொல்லை கிராமம் எழுந்தது. அப்போராட்ட தயாரிப்பின்போது வெடி விபத்திலே சிக்கி மூன்று போராளித் தோழர்கள் உயிரிழந்தனர். உயிரிழந்த தோழர்களுக்கு ஊர் மக்கள் சிலை வைத்தனர். அத்திருவுருவ திருமேனிகளுக்கு அன்று செவ்வஞ்சலி செலுத்தும் பாக்கியத்தை எனக்கு ஏற்ப டுத்தித் தந்தவர் தோழர் தங்கராசா.

அந்நிய சர்வதேச கம்பனிகளுக்கு நாட்டு இறைமை யினையும் வளங்களையும் தாரைவார்த்து கொடுத்துள்ளது பௌத்த சிங்கள பேரினவாத அரசு. ஆனால் ஏனைய தேசிய இனங்களுக்கு எதையும் கொடுக்கமாட்டோம். கொடுப்பது பிரதேச ஒருமைப்பாட்டையும் இறைமையையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறியும், சிங்கள பௌத்த மக்களின் காவலர் தாமே எனக் கூறிக்கொண்டு அவர்களின் மீது வாழ்க்கைச் சுமையை ஏற்றி வருகிறது. அதேவேளை சிறுபான்மை தேசிய இனங்களின் விடுதலைக்கு சிறந்த தலைமை தாமே என முழங்கும் தமிழ், முஸ்லிம், மலையக தலைமைகள், உழைக்கும் மக்களின் – விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்களின் நலன்கள் மீது அக்கறை இன்றி மேட்டுக்குடிகளின் நலன்களில் அக்கறை செலுத்திக்கொண்டு வருகின்றன.

நாட்டின் விடுதலைக்கும், தேசிய இனங்களின் விடுதலைக்கும் தீண்டாமைக்கு எதிரான போராட்டம் காட்டிய பாதையில் – உழைக்கும் மக்களின் தலைமையில் பரந்துபட்ட ஐக்கிய முன்னணியே வழிகாட்டும் என்னும் நம்பிக்கையோடு புதிய ஜனநாயக – மாக்சிச லெனினிச கட்சியின் கொள்கையை ஏற்று வழிநடந்த தோழரின் மறைவு உழைக்கும் மக்களின் விடுதலையை நேசிக்கும் அனைவருக்கும் பேரிழப்பாகும்.

உழைக்கும் மக்களின் விடுதலைக்காக ஒவ்வொருவரும் தங்கள் தனித்திறமைகளை அர்ப்பணிப்பதே தோழருக்குச் செய்யும் புரட்சிகர அஞ்சலியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சமூகத் தொண்டனை இழந்துவிட்டோம்

○ பொன். தம்பிமுத்து

முன்னாள் உறுப்பினர், கரவெட்டி பிரதேச சபை

**க**ன்பொல்லைக் கிராமத்திற்கும் கீழ்க்கரவை வளர்மதிக் கிராமத்திற்கும் சமூக உறவு ரீதியான தொடர்புண்டு. அந்த வகையில் நண்பர் ஆ. தங்கராஜா அவர்களை நான் கே. டானியல், சி. கா. செந்திவேல், மு. கார்த்திகேசன் ஆசிரியர் ஆகியோருடன் அரசியல் வகுப்பில் சந்தித்தேன். வகுப்பு நடந்த இடம் நெல்லியடியாகும். இதனைத் தொடர்ந்து சாதி அடக்குமுறைக் கெதிரான போராட்டம் வடமாராட்சி பகுதியில் பரவிவந்த வேளை தங்கராஜா அவர்களின் பங்களிப்பு எம்மவர் மத்தியில் பலத்தையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தியிருந்தது. இக்கால மதில் இடதுசாரிக் கம்யூனிஸ்டுக்கள் தலைமையில் கன்பொல்லை மக்கள் சாதி முறையையும் தீண்டாமையையும் எதிர்த்த போராட்டத்தில் முன்னின்று உழைத்தார்கள். சாதி அமைப்பு என்பது தமிழர் மத்தியில் இருந்து வந்த போதிலும் கரவெட்டிப் பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் தீண்டாமை என்ற நாசமும் சாதியமைப்புடன் இணைந்ததொன்றாகக் காணப்பட்டது. சில சாதியினர் தீண்டத்தகாத சாதிகளாகக் கருதப்படுமளவிற்கு உயர் சாதியினர் வீடுகளுக்குச் செல்லமுடியாது. கிணறுகளில் தண்ணீர் பெற முடியாது. தேனீர் கடைகளுக்குள் செல்லமுடியாது போன்ற மிகவும் மோசமான கொடுமைகளைச் சுமந்து நின்றனர்.

இக் காலப்பகுதியில் துன்னாலை, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மத்தி கிராமங்களின் விடிவிற்குக் கன்பொல்லை தீவிர இளைஞர்கள் கட்சியுடன், தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்துடன் தொடர்புகொண்டு நெல்லியடி தேனீர்க்கடைப் பிரவேசம் செய்தனர். இதன் மூலம் வெற்றியும் கண்டிருந்தனர். இதற்கு முதன் நிலையாளர்களாகப் பல இளைஞர்கள் செயற்பட்டதை நான் நன்கறிவேன். சமூக விடுதலைப் போராட்டங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே. ஏ. சுப்பிரமணியம், சி. கா. செந்திவேல், எஸ். ரி. என். நாகரத்தினம், கே. டானியல், மான்முத்தையா, வீ. ஏ. கந்தசாமி, இக்பால் போன்ற தலைமைப் போராளிகளோடு இணைந்து செயற்பட்டார். நன்றாகப் பேசுவதைவிடக் கருமம் செய்வதே மேலானது என்பதில் உறுதியாக நின்றவர் தங்கராஜா.

நண்பர் தங்கராஜா வாழ்ந்த சமூகச் சூழலிலுள்ள மக்கள் வளங்குறைந்த பாமர மக்கள். அவர்களின் எதிர்காலம் மீட்சி பெறவேண்டும். சுபீட்சம் நிறைந்ததாக மலரவேண்டும். ஒட்டு மொத்த மக்களின் வாழ்வியல் மாறவேண்டும் என்பதோடு இவர்கள் அடிமைப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களாக இல்லாது சுதந் திர மனிதர்களாக வாழவேண்டும். இவர்களின் அபிலாசைகள் விழுமியங்களுக்குத் தன்னை அர்ப்பணித்து 1965 காலப் பகுதியில் சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் ஓர் அங்கத்த வராக இணைந்து ஏ. கே. சுப்பிரமணியம், கே. டானியல், எஸ். ரி.என். .நாகரத்தினம், வீ.ஏ. கந்தசாமி ஆகியோருடன் இணைந்து செயற்பட்டவர் தங்கராஜா.

இத்தகைய பெருமைமிக்க வெகுசனப் போராட்டச் செயல் வீரனை இழந்துவிட்டோம். அன்னார் சமூகச் சாதி எதிர்ப்புடன் கல்வித் துறைசார் எழிச்சிக்கும் வித்திட்டவராவர். கரவெட்டி ஶ்ரீநாரத வித்தியாலயம் ஆரம்பிக்கும்போது இராசரத்தினம், தங்கமணி, என். சிவபாதம், பொன். ஆழ்வாப்பிள்ளை ஆகியோ ருடன் சேர்ந்து பாடசாலை கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப் பதற்கு முன்னின்று உழைத்த மகான். எம்மவர் இன்று சமூகப் பொருளாதார வாழ்வியலில் மேன்மை பெறுவதற்கு விடிவெள் ளியாக ஒளி தந்தவர். இத்தகைய சமூகப் பற்றாளனை இழந்து விட்ட நாம் அவரின் கனவை நனவாக்குவதற்கு எழிச்சிபெற்ற சமூகமாக மாற்றமடைந்து ஏனைய சமூகங்களுக்கு நிகராக நாமும் மாறவேண்டும். இதுவே அன்னாரிற்கு நாம் செய்யும் கடமையாகும். எழிச்சி கொண்ட சமூகம் வீழ்ச்சி கண்டதாக வரலாறு இல்லை. அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சியையும் தோழர்களையும் மக்களையும் நேசித்து வாழ்ந்தவர்

**O என். பிரதீபன்**

வன்னிமாவட்டச் செயலாளர்,பு.ஜ.மா.லெ.கட்சி

கம்யூனிஸ்ட் வாழ்வியலை சொல்லாலும் செயலாலும் வாழ்ந்து காட்டிய தோழர்தான் தோழர் தங்கராஜா. பொது வுடமைக் கட்சியோடும் உழைக்கும் மக்களோடும் இரண்டறக் கலந்து வாழ்ந்தவர். பெருமதிப்புக்குரியவர். அவர் எப்படிப் பட்டவர் எனில்,

தேடிச் சோறுநிதந் தின்று – பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி – மனம்
வாடித் துன்ப மிக வுழன்று – பிறர்
வாடப் பல செயல்கள் செய்து – நரை
கூடிக் கிழப் பருவமெய்தி – கொடுங்
கூற்றுக் கிரையெனப் – பின்மாயும் பல
வேடிக்கை மனிதரைப் போல் – நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ?

என்ற மகாகவி பாரதியாரின் கேள்விகளுடன் வாழ்ந்தவர்.

**தோழர்**. இதுதான் உலகிலேயே மதிப்புக்குரிய மிகப்பெரிய சொல். அந்த வகையில் இளைஞனாக ஒரு பதினைந்து வருடங்களுக்கு முன்பாக நான் அவரை வடபுலத்து முன்னிலைத் தோழர்களுடன் நிற்கும்போதும் உரையாடும்போதும் கண்டிருக் கின்றேன். அவர்தான் எங்களுடைய மதிப்புக்குரிய, தோழமைக் குரிய, உயர்வான எண்ணங்களையுடைய தோழர் தங்கராஜா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை நான் எங்களுடைய கட்சியின் வடபுலத்து யாழ் பணிமனையில் அடிக்கடி கண்டதுண்டு. நரைத்த முடியுடன், நன்கு சவரம் செய்யப்பட்ட முகத்துடன், அதிகம் வெள்ளைச் சேட்டும் வெள்ளை வேட்டியும் கட்டியவராக அலுவலகத்தின் முன்பகுதியில் எல்லோரையும் வரவேற்பவராக நிற்பார். நான் என் மனதிற்குள் நினைப்பதுண்டு இவர்தான் கட்சியின் வரவேற்பாளரோ என்று. வவுனியாவில் இருந்து வரும் என்னைக் கண்டவுடன் இரண்டு கரங்களையும் இறுகப்பிடித்து முகம் நிறைந்த புன்சிரிப்புடன் தோழர் என்று கூப்பிடுவாரே! அந்தத் தருணம் உலகத்தின் முழுப் பலத்தையும் எனக்குள் அடக்கியவனாக, உடல் ஒரு முறை சிலிர்க்க, கட்சிப் படியேறி உள் நுழைந்து ஒரு ஐந்து நிமிடங்கள் அவரை நினைத்தவனாக இருந்திருக்கின்றேன்.

அவரிடமிருந்து நாங்கள் நிறையவே கற்றிருக்கின்றோம். இன்னும் கற்க வேண்டியும் உள்ளது. அதாவது எந்த தரு ணத்திலும் கட்சியையும் மக்களையும் விட்டுப் பிரியாமல் இருப்பது, நேரந் தவறாமை, கட்சிக்கு நிதி கொடுப்பது, எந்தத் தடை வரினும் எதிர்கொண்டு நிற்பது. இது எல்லாவற்றையும் விட தோழர்களை அரவணைப்பதும் நேசிப்பதும். இது அவரிடம் நான் நேரடியாக கண்ட விடயங்கள். இவை இளம் தோழர்களாகிய நாங்கள் அவர் போன்ற முன்னோடித் தோழர்களிடமிருந்து கற்க வேண்டியவையாகும்..

அவர் ஒரு சிறந்த பாடகர். எங்களுடைய கூட்டங்களில் பாடும்போது உள்ளடக்கமும் இசையும் இணைந்து உள்ளூர உணர்ச்சி பொங்கக் கண்கள் கலங்கியதுண்டு. அவரை இறுதியாக யாழ் வைத்தியசாலையில் நானும் தோழர் நந்தமோகனும் சந்தித்த போது, அன்று றிம்மர் மண்டபத்தில் கட்சியின் நாற்ப தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போது அவரும் அவருக்கருகில் அவரது மகளும், பேரப்பிள்ளையும் நின்றிருந்தனர். அவரிடம் நலம் விசாரித்து விட்டு எதுவும் தேவையா? எனக் கேட்டபோது, **எனக்கு எல்லாம் இருக்கின்றது. என்னைப் பிள்ளைகள் நன்றாகப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பார்க்கின்றார்கள். இன்று கட்சியின் கூட்டம் அதைச் செய்வதை விட்டு விட்டு என்னைப் பார்க்க ஏன் வந்தீர்கள்?** எனக் கேட்டார், இன்னும் இன்னும் உற்சாகமும் கட்சியை முன்கொண்டு செல்லவேண்டிய கடமையும் அவரிடமிருந்து எமக்குள் வருவதை உணர்ந்தேன். அந்த வருத்தத்திலும் அவர் என்னிடம் புலம்ப வில்லை. அவர் கட்சி பற்றித்தான் விசாரித்தார். மூத்த தோழர்களை சுகம் விசாரித்தார்.

இன்றைய சமூகத்தில் எவ்வளவு சுயநலமும் தனிமனித ஈடேற்றமும் தானுண்டு தன் வேலை உண்டு என்று வாழ்கின்ற வர்கள் மத்தியில் தோழர் தங்கராஜா மிகவும் மதிக்கத்தக்க முன்னணித் தோழர் ஆவர். எங்களுடைய கட்சியால் முன்னெ டுக்கப்பட்ட பல்வேறுபட்ட போராட்டங்களிலும் அவர் நின்றி ருக்கிறார். அவர் யாழ்ப்பாணத்திற்குரியவர் மட்டுமல்ல. அவர் இலங்கையின் அனைத்து உழைக்கும் மக்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் சொந்தமானவர். அந்த வகையில் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட வெகுஜனப் போராட்டங்கள், மேதினப் பேர ணிகள் பொதுக் கூட்டங்கள் என அனைத்திலும் தோழர் தங்க ராஜா பங்குகொண்டு, தான் மக்களுக்காக வாழ்ந்த கம்யூனிஸ்ட் போராளி என்பதை நிலை நிறுத்தியவர்.

எந்த தருணத்திலும் அவர் கட்சியிடம் தன்னுடைய சொந்த தேவையை எதிர்பார்க்காதவர். உழைக்கும் மக்களுக்காக, ஒடுக் கப்பட்ட மக்களுக்காக இறுதிவரை அவரது கரங்கள் உயர்ந்தே இருந்தன. எனெனில் மனிதர்களில் இரண்டு வகையினர் உள் ளனர். ஒன்று வெறுமனே வாழ்ந்து விட்டுப் போவது. இன்னொன்று அர்த்தமுடன் வாழ்ந்து காட்டுவது. மனித சமூகத் தில் அநீதி நடக்கும் போது அதைப் பார்த்துக் கொண்டு இருக்காமல் சக மனிதனின் துயரத்தில் பங்கெடுத்து குரல் எழுப்பி எல்லோரும் சரிசமம் என்று சொல்லி வாழ்வது, அதுதான் இரண்டாவது வகையான வாழ்ந்து காட்டுவதாகும். **மனிதன் என்பவன் வாழும் காலத்தில் மற்ற மனிதர்களுக்கு பயன்படக் கூடியவனாய் வாழ்தல் வேண்டும்** என மாமேதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்ல் மார்க்ஸ் கூறிச் சென்றார். அந்த வகையில் தோழர் தங்கராஜா அர்த்தமுடைய தோழராக வாழ்ந்துக் காட்டியவர்.

இப்படிப்பட்ட தோழரிடமிருந்து இளம் தோழர்களும், உழைக்கும் மக்களும் ஏராளம் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. நாங்களும் அவர் எந்த வழித்தடத்தில் வழி நடந்தாரோ அந்த வழித்தடத்தில் மாக்சிசம், லெனினிசம், மாவோசேதுங் சிந்தனை எனும் வழித்தடத்தில் செங்கொடியை உயரப்பிடித்தவாறு, துணிவுடனும் தோழர்களின் ஐக்கியப்பட்ட ஒற்றுமையுடனும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியாய் முன்சென்று உழைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை வென்றெடுப்போம்! என அவருக்கான ஒரு வருட நினைவு நிறைவில் உறுதிமொழி எடுத்துக்கொள்கின்றோம்.

மனிதன் ஒரே ஒரு முறை தான் பிறக்கின்றான். அவன் இறக்கும்போது தன் வாழ்நாள் முழுவதும் புறக்குடத்து நீர் போல் ஆகிவிட்டதே என்ற மனக் கவலையோடு இறக்கக்கூடாது. தன் வாழ்நாள் முழுவதும் மனிதகுல விடுதலை என்ற மகத்தான இலட்சியம் தழுவிய போராட்டத்தின் தனது ஆற்றல் முழுவதையும் அர்ப்பணித்திருந்தேன். என்ற மனத் திருப்தியோடும் மன நிம்மதியோடும் இறக்க வேண்டும்.

**வீரம் விளைந்தது என்னும் நாவலிலிருந்து**

**நிக்கலாஸ் ஒஸ்திரோவஸ்கி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்தின் முன்னேற்றத்தில் முன்னின்று உழைத்தவர்

○ க. இராஜரட்ணம்

ஸ்தாபகர், ஓய்வுநிலை அதிபர், சிறி நாரதாபாடசாலை, கன்பொல்லை

வடமராட்சியின் கன்பொல்லை என்னும் கிராமத்தில் உதித்த சமூக சேவையாளர்களில் ஒருவர் திரு. ஆ. தங்கராஜா. இவரது இழப்பு எமது கிராமத்தின் மீது பற்றும் பாசமும் வைத்திருந்த சேவையாளர்களையும் பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும் மனிதநேயம் கொண்ட அனைவரையும் பெரும் சோகத்தில் ஆழ்த்தியிருக்கின்றது.

திரு. ஆ. தங்கராஜா சமூக நலன்களிலும், அரசியல் துறை யிலும், பொதுவான பல பிரச்சினைகளிலும் ஆர்வமுள்ளவர். இவரின் இழப்பு எமது மக்களுக்கு பெரும் துன்பம் தருவதாய் அமைந்துள்ளது.

திரு. ஆ. தங்கராஜா எமது கிராமத்தில் கனுவில் சனசமூக நிலையத்தில் உப செயலாளர், பொருளாளர் பதவிகளில் இருந்து பல பணிகளை செய்துள்ளார்.

எமது கிராமத்தில் ஒரு பாடசாலை புதிதாகத் தொடங்கும் போது காணியில் பலர் பிரச்சினையை எடுத்தார்கள். அந்த நேரத்தில் தனது தகப்பனார் திரு. சி. ஆழ்வாருடன் கதைத்து அவருடைய காணியையும் அவருடன் சேர்ந்த பங்காளரையும் சேர்த்து பாடசாலை அமைக்க நிலம் பெற்றுத் தந்தவர். இந்த வகையில் தங்கராஜா உதவி செய்யாது விட்டிருந்தால் ஸ்ரீ நாரத வித்தியாலயம் உண்டாகி இருக்க முடியாது. இந்த பாடசாலையில் இன்று 1–11 வரை வகுப்புகள் நடைபெறுகிறது. இப்பாடசாலையில் படித்தவர்கள் புலமைப் பரீட்சையிலும் க.பொ.த சாதாரணதர பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளார்கள். இதற்கும் திரு. ஆ. தங்க ராஜாவின் முயற்சி உண்டு. இவர் எங்கள் கிராமத்தில் ஒரு முன்னோடியாக இருந்தார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கிராமத்தில் உள்ள மக்கள் வெளி இடத்தில் பல. நோ. கூட்டுறவு கடைகளில் நின்று துன்பம் அடைவதைக் கண்டு கன்பொல்லையில் ஒரு கூட்டுறவு சங்கத்தை தொடங்கும்போது பல எதிர்ப்புக்கு மத்தியில் நின்று திரு. ஆ. தங்கராசா உதவி யிருந்தவர்.

நெல்லியடியில் தேனீர்க்கடை திறப்பு விஷயத்தில் பல கட்சிகளைக் கொண்ட பிரதிநிதிகளையும் கூட்டி கனுவில் சன சமூக நிலையத்தில் கூட்டம் கூடியவர்களில் தங்கராஜாவும் முன்னின்றவர். அவர் அங்கம் பெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் போராடியதில், பல பிரச்சினைகளுக்கு மத்தியில் தேனீர்க் கடைகள் சிறுபான்மை மக்களுக்கு திறந்துவிடப்பட்டன.

திரு. ஆ. தங்கராசா ஒரு இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்தவர். கன்பொல்லை கிராமத்தில் ஒரு தேசிய வீடமைப்பு திட்டத்தில் வீடுகள் கட்டி வீடு இல்லாத மக்களுக்கு கொடுக்கும் போது பல தடைகள் ஏற்பட்டன. உயர் சாதி எனப்படும் மக்களின் காணி களைச் சுவீகரிக்க முடியாது பட்ட துன்பங்களில் என்னோடு இணைந்து செயற்பட்டுள்ளார்.

சிறுபான்மைத் தமிழ் மகன் முன்னைய காலத்தில் பொதுத் தேர்தலில் நின்றது இல்லை. இவர் இவரின் கட்சியின் பட்டியலில் பொதுத் தேர்தலில் நின்று முன்மாதிரியைக் காட்டியுள்ளார்.

தங்கராஜா மறைந்தாலும் அவர் ஆற்றிய சேவையை ஒருபோதும் மக்கள் மறக்கமாட்டார்கள். ஆ. தங்கராஜாவின் இழப்பு எமது இக்கிராமத்து மக்களுக்குப் பெரும் இழப்பாக அமைந்துள்ளது.

திரு. ஆ. தங்கராஜா ஒரு சங்கீத வித்துவானாகவும் ஆர் மோனிய கலைஞனாகவும் வாழ்ந்துள்ளார் என்பது குறிப் பிடப்பட வேண்டியதாகும். அவருடைய தந்தையார் ஆர்மோனிய இசைக் கலைஞராகத் திகழ்ந்ததுடன் கூத்து நாடகங்கள், காவடி போன்றவற்றைப் பயிற்சி செய்து அரங்கேற்றி வந்தவர். அவரது வழியில் தங்கராஜாவும் பயணித்தார். அவரது மறைவுக்கு எனது இதயபூர்வமான இரங்கலும் அஞ்சலியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் தங்கராசா எங்கள் ராசா

○ சட்டத்தரணி சோ. தேவராஜா

தலைவர், புதிய-ஜனநாயக பொதுத் தொழிலாளர் சங்கம்

1

**பா**ட்டி சொல்லும் கதைகளிலே "முன்னொரு காலத்திலே ஓர் ஊரிலே ஒரு ராசாவும்... வாழ்ந்து வந்தனர்" எனத் தொடங்கும் அந்த ராசாக்கள் இப்போது எங்கே தலைமறை வாகினர். அவர்களை நாம் தேடவேண்டும்.

அயல் நாட்டார் எங்கள் ஈழத்திருநாட்டில் படையெடுத்து வந்தனர். 1505இல் போர்த்துக்கீசர் முதலில் எம்மை அடிமை செய்தனர். அதன்பின்னர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் எமது மக்களை அடிமைகளாக்கினர்,

ஆங்கிலேயர் காலத்தில் சாராயம் குடிவகைகளை இலங் கையில் அறிமுகம் செய்தனர். அதனைத் தமது சிங்கள முகவர் கள் மூலம் விற்று அவர்களைச் செல்வந்தர் ஆக்கினர். யாழ்ப் பாணத்தில் வேளாளர் குலத்தினரை தமது ஆங்கில மொழிக் கல்வியில் மேலாளர் ஆக்கினர். ஆங்கிலேயர் 1948இல் இலங் கையை விட்டு வெளியேறிய வேளையில் தமது சாராய விற்பனையில் செல்வந்தர்களான சிங்கள பிரபுக்களிடம் ஆட் சியை விட்டுச் சென்றனர். தமிழ் வேளாளர் எங்கள் உழைக்கும் ராசாக்களை சுவாமி விவேகானந்தர் கூறியவாறு 'புத்திசாலிப் பிராமணர் உருவாக்கிய சாதியச் சதியில் யாழ்ப்பாண உழைக் கும் மக்களை அடிமை, குடிமை, சிறைகள் ஆக்கினர்.

ஆம். யாழ்ப்பாண ஒழுங்கைகளில் வேலிகளுக்கிடையில் ஓலைக் குடில்களில் உழைக்கும் மக்கள் சிறை வைக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20ம்நூற்றாண்டின் தென்னாசிய மறுமலர்ச்சிக் கவிஞன் பாரதி யின் **மக்களே மன்னர்கள்** எனக் கட்டியம் கூறிய மந்திர அடிகள் வருமாறு:

'முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் **பொது உடைமை**
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை...

மனிதருணவை மனிதர் பறிக்கும்
வழக்கமினியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கையினியுண்டோ– புலனில்
வாழ்க்கையினி யுண்டோ? – நம்மிலந்த
வாழ்க்கையினியுண்டோ?...
...
இனியொரு விதி செய்வோம் – அதை
எந்த நாளுங்காப்போம்
தனி யொருவனுக் குணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்...
...
எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓர் இனம்
எல்லோரும் இந்திய மக்கள்
எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் ஓர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்– நாம்
எல்லோரும் இந்நாடு மன்னர் – ஆம்
எல்லோரும் இந்நாடு மன்னர்.

எமது மக்கள்– மன்னர்கள்– ராசாக்கள் வெளியாரின் சூழ்ச்சியாலே அஞ்ஞாத வாசம், வனவாசம்– தலைமறை வாழ்வு– எனப் பல்லாண்டுகளாய் அடையாளமிழந்த 'பாமரராய் – விலங்குகளாய்' வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இலங்கையின் ஒப்பற்ற கவிஞர் மஹாகவி 'சாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர் சரித்திரம்' என மாசற்ற மக்கள் மன்னர்களின் வரலாறை நவீன யுகத்தில் படைத்து முரசறைந்தார்.

கவிஞர் சுபத்திரன் "குச்சுக் குடிசைக்குள் கொலுவிருக்கும்" எங்கள் மகாராசாக்களை– தங்கராசாக்களை விரல் சுட்டி வெளிக் காட்டினார்.

கவிஞர்க்கு கவிஞர் இ. முருகையன் 'கடூழியம்' என்ற நாடகத்திலை எங்கள் ராசாக்கள் 'பொற்பதக்கப் பூட்டிப் புனைந்த சிறைகளிலே' வாடுவதைப் பறைசாற்றினார். 'அப்பரும் சுப்பரும்' மாறி மாறி மக்கள் ஆகிய எமது ராசாக்களை ஆண்டுவரும் அநியாயத்தைப் புட்டுக்காட்டினார்.

ஆம். எங்கள் தங்கராசா இந்நாட்டு மன்னன். எங்கள் ராசா. "பாரதி சொன்னதுபோல் எங்கள் தோழர் தங்கராசாவும் 'எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையில்' எம்மை உடலால் பிரிந்தாலும் ஆத்மார்த்த உறவால்– வர்க்க உணர்வால், என்றும் எமக்கு 'உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய்' எம்முடன் ஆழ்வான் தங்கராசா– இந்நிலத்தில் ஆள்வான் தங்கராசா மக்கள் மனதில் வாழ்வான் தங்கராசா என்றும் நீடூழி வாழ்வார் என்பது திண்ணம்.

## 2

கடந்த 500 ஆண்டுகளுக்கு மேலால் கொலனிய– நவ கொலனிய எசமானர்களால் சிறைவைக்கப்பட்ட எம்மன்னர்கள் எமது இலங்கைத் தீவிலும் தத்தம் எல்லையினுள்– ஊரெல்லைக்குள்– பிரதேசப் பகுதியினுள் சுய கௌரவத்துடன் தன்மானத் தலைவர்களாக கோலோச்சி வருகின்றனர்.

இத்தகைய தலைமைத் தோழர்களில் வடமராட்சி கரவெட்டி மேற்கு கன்பொல்லையில் வாழ்ந்த தோழர் தங்கராசாவும் ஒருவராவார்.

பிரித்தானிய கொலனிய எசமானர்களாலும் தொடர்ந்து நவகொலனிய உள்ளூர் முதலாளிய முகவர்களாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்டு பேணப்பட்டுவரும் அரசியல் யாப்பும் – பிரதிநிதித்துவ ஜனநாயக அமைப்பு முறையும்– முதலாளிய ஊடக அனுசரணையினால் விளம்பரப்படுத்தப் பட்டவர்களையே தலைவர்களாகப் பேணிவரும் மாயத்தோற்ற மயக்கமுள்ளது.

உண்மையில்– யதார்த்தத்தில்– நிஜத்தில் மக்களுடன் மக்களாய்– கம்யூனிஸ்ட் கட்சியில்– புதிய – ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியில் வடமராட்சியின் பங்காளராக உழைக்கும் சாதாரண மக்களில் ஒருவனாகி– கட்சியின் உறுப்புகளில் ஒன்றாகி– ஊரின் நன்மை தீமைகளில், இன்ப துன்பங்களில், வளர்ச்சி முயற்சிகளில், ஆடல் பாடல் இசைகளில், மக்கள் இயக்கங்களின் சகல போராட்டங்களிலும் கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் புத்தக அரங்கப் பண்பாடுகளில் ஈடுபட்டு– பாடுபட்டு பங்குபெறும் ஜனநாயக– சமூகப் போராளியாக; முகந்தெரியாத– பெயர் அறியாத– வீடியோ–கமராக்களில் முகம் காட்டாத– நிதானமான– அஞ்ஞாத வாசம், வனவாசம் அனுபவித்த ராசாவாக எங்கள் கம்யூனிஸ்ட் தலைவர்– தங்கராசா உலா வந்தார் எனில் மிகையாகாது.

கட்சியின் சகல அமைப்புகளிலும் முன்னிலை வகித்துப் பணியாற்றினார். தேசிய கலை இலக்கியப் பேரவை, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம், புதிய– ஜனநாயக பொதுத் தொழிலாளர் சங்கம் எனச் சகலவற்றிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

தோழர் என்றால் தங்கராசா. தங்கராசா என்றால் கம்யூனிஸ்ட் கட்சி எனத் தன்னைத் தகவமைத்தார். வீரஞ் செறிந்த– வீரம் விளைந்த– கன்பொல்லை நிலத்திலே முப்பெரும் தியாகிகள் சீவரத்தினம்– செல்வராசா– வேலும்மயிலும் ஆகியோருடன் ஏனைய தோழர்கள் இரத்தினம், சிவபாதம் போன்ற பல தோழர்களுடனும் கலைஞர் தங்க பாஸ்கரன் போன்ற கலைஞர்களுடனும் கலைவல்லுநரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கராசா பிறர் ஈனநிலை கண்டு துள்ளும் சமூகப் போராளியானார். சாதி, இனம், மொழி, வர்க்கம் என எந்த வடிவத்தில் அடக்குமுறை வரினும் அதற்கெதிராக முன்னின்று கலங்காத உள்ளத்துடன் துணிந்து முகங்கொடுக்கும் வல்லமை பெற்றார்.

கறுத்த மேனியும், வெள்ளை வேட்டியும் சேட்டும் வெற்றிலை பாக்கிட்ட சிவந்த வாயும் சிரித்த முகமும் தெளிந்த உள்ளமும் கொண்ட அழகன் தான் எங்கள் தங்கம்.

கலைஞான வாரிதி, இசைவாரிதி, கலைச்சுடர் தங்கராசா ஐந்து பிள்ளைகள் பன்னிரு பேரப்பிள்ளைகளுடன் இல்லற ஜோதியாய் மிளிர்ந்தவர்.

3

எங்கள் தங்கராசா ஏழைகளின்– தொழிலாளர்களின்– ஊரார்களின் – உழைப்பாளர்களின் தலைவராக அறிஞர் லூசுன் குறிப்பிட்டது போல் 'மக்களுக்குத் தலைதாழ்த்தி எருதுபோல் சேவை செய்வதில்' முதன்மை பெற்றார்.

திருவள்ளுவரின் அரசியல்– இறைமாட்சிக்கு இலக்கணமாவார் தோழர் தங்கராசா. அவரின் நற்குண நற்செய்கைகள் உலகத்தாரெனும் ஊராரைக் காத்தலால் 'இறை' ஆனார்.

இலங்கைத் திருநாட்டின் தலையாகத் தோற்றமளிப்பது யாழ் குடாநாடு எனில் அதன் மூளையாக அமைவது வடமராட்சி எனப் பலரும் புகழ்வதை அறிந்துள்ளேன். வடமராட்சியில்– கரவெட்டி மேற்கில்– கன்பொல்லைக் கிராமத்தில் மக்கள் தலைவனாக இறைமாட்சியுடையோனாக வாழ்ந்தவரே தங்கராசா.

'படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு'

என்பார் வள்ளுவர். உழைப்பாளர் படையும் ஊர் மக்கள் குடியும் உழைப்பும் ஊதியமும் கம்யூனிஸ்ட கட்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபிரதேச அமைச்சும் தோழமை நட்பும் மக்கள் பாதுகாப்பு அரண் என ஆறும் உடையவன்தான் அரசருள்- அரசியலாளருள் உயர்ந்தவராவார் என விளக்கத்தின் விளக்கமாவார் தோழர் தங்கராசா.

'அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு'

அரச பயங்கரவாதம், தமிழ் மேட்டுக்குடியின் கெடுபிடி போன்றவற்றுக்குப் பயமின்மை; தன்னுடல், பொருள், உயிரையே பொதுமக்களுக்கு ஈகை செய்தும்; மாக்சிய சமூகவிஞ்ஞான அறிவும்; அதனால் பெற்ற செயற்படு ஊக்கமும் ஆகிய நான்கு இயல்பும் வாய்க்கப் பெற்ற வேந்தன்தான் எங்கள் தங்கராசா எனலாம்.

'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள்பவற்கு'

தமிழ் மக்களின் காணி விடுவிப்புப் போராட்டம், அரசியல் கைதிகளை விடுவித்தல், நிலத்தடி நீர் பாதிப்பு, சுற்றுச்சூழல் ஆகிய சகல போராட்டங்களிலும் கட்சியில் இணைந்து தான் கற்ற மாக்சிய சமூக கல்வி, துணிவு, தூங்காமை ஆகிய இம் மூன்றுடனும் நிலமாள்பவராக மாற்றம் வேண்டிய சமூகப் புரட்சியின் பக்கம் தோழர் தங்கராசா தன்னை நிலை நிறுத்தினார்.

'காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்'

மக்களுடன் மக்களாக மக்களுக்காக தன்னை அர்ப்பணிக்கும் அரசியல் தலைவரானவர் எப்போதும் காணக் கூடியவராகவும் அன்பாகக் கதைக்கக் கூடியவராயும் இருக்கும் போது அவர் வாழும் அந்த ஊர் எல்லா நிலங்களிலும் உயர்ந் ததாகக் கூறப்படும். கன்பொல்லை என்றால் கட்சி- கம்யூனிசம்- மூன்று தியாகிகளின் அர்ப்பணம்- சமத்துவ நோக்கும் போக் கும் நிலைக்கத் தன்னை- தனது குணத்தால் இனிய சொல்லால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வு பெறச் செய்தவர் தோழர் தங்கராசா.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'

மக்கள் புரட்சிக்கு- சமூக உயற்சிக்கு- இன்ப வாழ்வின் இலட்சியத்துக்கு ஏற்றதான மாக்சியச் சிந்தனையை- படித்தும் கேட்டும் சிந்தித்தும் அதன்படி செயற்பட்டு சொல்லும் செயலு மாய்- புதிய வார்ப்பாய் துலங்கியவர் தோழர் தங்கராசா.

எங்கள் தோழர் தங்கராசாவை எமது புரட்சிகர அஞ்சலி யால் நாம் அனைவரும் போற்றுவோம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தோழர் தங்கராசா அண்ணை

○ தவராசா சத்தியதாஸ்
டென்மார்க்

**தோ**ழர் தங்கராசா அவர்களின் நினைவுகளை எங்கிருந்து தொடங்குவது?

ஒவ்வொன்றாக அவரது தோழர்கள் வே. பரமகுரு, கே.எஸ். இரத்தினம், சீ. செல்லக்களி, ஆ. சுந்தரம் என இன்னும் பலர் அந்த மண்ணில் உதிர்ந்தபோதும் ஒற்றைப் பனைமரமாக அந்தக் கிராமத்தில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் தனித்துவமிக்க தோழராக அவர் வலம் வந்தார். கோட்பாட்டு ரீதியில் தனது கட்சியின் கோட்பாடுகளுடன் அவர் தன்னை அடையாளப்படுத்தியபோதும், சமூகத்தில் தானும் ஒருவராக தன்னை இணைத்துக்கொண்டு அவர் தோப்பாகவே வாழ்ந்தார். ஒரு சோஷலிசவாதிக்குரிய அரிய பண்புகளுடன் கிராமத்தில் எரிந்துகொண்டிருக்கும் எந்தப் பிரச்சினையிலும் சிநேகமாக தீர்வு தேடும் ஒருவராக அவரை நான் அடையாளம் கண்டேன். அது கோவிலோ, சுடுகாடோ, கழகங் களோ அல்லது பாடசாலையோ பொதுச் செயற்பாடுகளில் பகை முரண் பாடு களைக் களைந்து சினேக முரண்பாடுகளைக் கண்டறிந்து அவற்றை இளைஞர் மத்தியில் பேசுபொருளாக்கி, ஐக்கியத் தினை வலியுறுத்தும் நல்ல முன்னோடியாக அவரைக் கண்டேன். அவர் இல்லாத கிராமத்தில் கிராமத்தின் வளர்ச்சியில் எனது நம்பிக்கைகளில் நான் பயம் கொண்டுள்ளேன்.

தேசம் என்பது மக்களின் துருவப்படல் என்றும், தேசியம் என்பது இந்த மக்கள் துருவப்படலின் மொய்த்தலின் பிரக்ஞை என்பதிலும் எனக்கும் தோழர் தங்கராசா அண்ணருக்கும் ஒரே வகையான புரிதல் இருந்தது. நான் அவர்கள் காலத்து குடும்பங்களில் வளர்ந்த குழந்தை. ஆதலால் இன்று இலங்கைத் தீவில் எரிந்துகொண்டிருக்கும் இந்தப் பிரச்சினையில் என்னை எங்கே வைத்துப் பொருத்திப் பார்ப்பது? என்பது எனக்கு சுலபமாகவிருக்கின்றது. எனில் துருவப்படல் என்பது இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தளங்களில் சமூக இயக்கத்தில் இயங்குகின்றது. மொழி, மதம், பண்பாடு, சாதி, பால் என எங்களை வகைப்படுத்தி, ஏதாவது ஒன்றிலோ அல்லது சிலவற்றிலோ ஒரு சங்கிலிக் கோர்வைபோல் எங்களை உணர்ச்சி வயப்படுத்தி இணைத்து வைக்கும் இதில் எமது முதன்மைப் பிரச்சினை எது என்னை நேரடியாக வறுக்கும் எனக்கு முன்னால் எரிந்துகொண்டிருக்கும் பிரச்சினை எதுவென்பதினை நாம் எப்படி கண்டு அடைவது? ஒரு சோஷலிசவாதியாக நெருக்கடி மிக்க இன்றைய சூழலிலும் அவர் தெளிவாகவே இருந்தார். அவரை நினைவு கொள்ளும் இவ்வேளையில் இன்றைய எமது கிராமத்து இளைஞர்களே! அவர் திரும்பத் திரும்ப என்னிடம் பேசும்போது எழுப்பிய சில கேள்விகளை உங்கள் முன்வைக்கின்றேன்! முடிந்தால் விடை காணுங்கள்! அவரது கட்சித் தோழர்கள் எமது கிராமத்தின் நெருங்கிய உறவுகள் அவர்களுடன் உரையாடுங்கள்! அவர் களிடம் விடைகள் உண்டு! அவர்களை அழைத்து எங்களை அறிந்துகொள்ளுங்கள்.

தோழர் தங்கராசாவின் சிந்தனையில் சில கேள்விகள் எங்களுக்கு ஏன் இன்னும் சுடுகாடு தனியாக இருக்கின்றது? இதுவரை காலமும் வேரொண்டை மயானமாக மட்டும் பெயர்கொண்டிருந்த மயானம் எப்படி இந்து மயானமாக பெயர் மாற்றப்பட்டது? நாங்கள் ஏன் 1964ல் பவுத்த மதத்தில் சேர்ந்து பாடசாலை உருவாக்க வேண்டியிருந்தது? எங்கள் கிராமத்தி லிருந்து எந்த சமத்துவத்துக்கு போராடி எங்களது மூவரை இழந்தோம்? இவற்றுக்கு விடை தெரிந்தவராக இறுதிவரை தோழர் தங்கராசா இருந்தார். அவர் இவ் எல்லாத் தளங் களிலும் எல்லாத் தலைமுறையிலும் இணைந்து செயற்பட்டவர். இறுதியாக இருந்த வேரை விழுதை இன்று இழந்து நிற்கின்றோம்.

இதை இவரிடமும் இவரோடொத்த எமது முன்னோடிகளிட மிருந்தும் நாம் கற்றுக்கொள்ளலாம். அவரது அர்த்த புஷ்டியான வாழ்வை வரலாற்றினை இன்னொரு சந்தர்ப்பத்தில் விபரமாக எழுதவுள்ளேன். தோழரை நினைவில் நிறுத்தி செங்கொடியினை சாய்த்து வணங்கு கின்றேன். செவ்வணக்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேந்துமேன் சுணக்கம்

செண்பகன்

இன்ன இன்னார்தான் எங்கள் தலைவர் என்றோ
மன்னரென்றோ மணி முடியுடை ராசா என்றோ
முன்னோரும் பிறரும் சொன்னவற்றை நீவிர்
மறுமடியும் திருப்பிச் சொல்லாதீர் எண்ணாதீர்.

மணிமுடி பஜிரோ எம்பி பாராளுமன்றம் என
இனியும் போறடிச்ச வாக்குப் பொறுக்கியள் கதை
பண்ணாதீர் பறையாதீர்
இன்னல் படுபவர்க்காய் தெருவில் இறங்கி
இன்னும் போராடும் சிறையில்வாழும்
எங்கள் மன்னர்களை மக்களைப்
பாருங்கள் பேசுங்கள் பறையுங்கள் பகிடிகள் பண்ணாதீர்
ஊடக ஊத்தைகளின் உதவாக்கதை
கேளாதீர் கதையாதீர் மங்காதீர்
உலகவங்கி ஐஎம்எவ், என்.ஐ.ஈயின்
ஆலோசனை கேளாதீர் அவர்பிச்சை ஏற்காதீர்

மேனகைகள் மேனியிலே முளைவிடும் விசுவாமித்திர
மேலுலக மேற்குலக விசுவாசம் தொலையுங்கள்
மண்ணையும் முடியையும் பெண்சாதி பிள்ளையையும் இழந்து
விண்ணுலக விசுவாசமித்திரச் சதியால் காடு சென்று
கைதாகி காணாமலாக்கப்பட்ட அரிச்சந்திர
மாராச மக்கள் அவர்பக்கம் பாருங்கள்
பேசுங்கள் கூடுங்கள் நாம் எல்லோரும்
பாடுவோம் பரவுவோம் படர்வோம் போராடுவோம்

நிலம் மீட்போம் இரந்து பிறர் கையேந்தோம்
உலகெலாம் நாடோடியாய் ஓடித் திரியாமல்
மன்னர் பிள்ளை சுற்றமென உறவாடி ஒன்றாகக் கைகோர்ப்போம்
ஊர்வலமாய் நீண்ட நெடும்பயணப் போதிலே தலை நிமிர்வோம்–
ஏழை பரதேசி உழைப்பவர் உலகே
எமதென ஆர்ப்பரிப்போம் ஆடுவோம்
பாடுவோம் நாம் அனைவரும் ஒன்றாவோம்.

வாருங்கள் பேந்துமேன் சுணக்கம் தயக்கம்
பாருங்கள் எங்கள் தங்கராசாத் தோழர்
தரணியெலாம் ஆள்வார் சூழ்வார் அவருடன் நாம் இணைந்தே
ஆனந்தக் கூத்தாடுவோம் தத்தகிட தித்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோழர் தங்கராஜா புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தன்னைப் பிணைத்துக் கொண்டவர். அன்றிலிருந்து தனது இறுதி மூச்சுவரை கட்சியோடும் மக்களோடும் நெருக்கமாக இருந்து அரசியல் பணியாற்றியவர். ஆரம்ப காலம் தொட்டு கட்சியின் கூட்டங்கள், பேரணிகளில் முன்நிற்கும் தோழர்களில் தங்கராஜா உணர்வும் உற்சாகமும் கொண்டவராக இருந்து வந்தவர். முன்பு புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் என்பனவற்றில் தீவிர செயற்பாட்டாளராக இருந்து வந்த தங்கராஜா 1978 ஆம் ஆண்டின் பின் உருவாகிய இன்றைய புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஆரம்பத் தோழர்களில் முக்கியமானவராக இடம் பெற்று அதன் வட பிராந்தியக் குழுவில் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுத் தொடர்ச்சியான கட்சிப் பணியாற்றி வந்தவர். அவரது பேச்சில் நிதானமும் தூர நோக்கும் கொள்கைப் பிடிப்பும் உறைந்து காணப்படும்.

தமது சமத்துவ உரிமைகளை வென்றெடுத்து நிலைநாட்டுவதற்காக இடம்பெற்ற கடந்த காலப் போராட்டங்களில் வெற்றி பெறத் தாழ்த்தப்பட்ட மக்கள் இரத்தம் சிந்தியதோடு உயிர்த்தியாகங்களும் செய்தனர் என்னும் வரலாற்று உண்மைகள் இன்றைய புதிய தலைமுறையினருக்கு எடுத்துக் கூறப்படுவது அவசியம்.

சி கா செந்திவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org